விலை சதம் 20

# விடுதலை

> **பிரிவினை வேண்டும்!**
>
> வெறும் பொதுவுடைமைக் கொள்கை சாதி பேதத்தை ஒழித்து, மதப்பிடியிலிருந்து விடுவித்து, மூடப்பழக்க வழக்கங்களில் ஈடுபட்ட மக்களை விடுதலை செய்து, நம் நாட்டை நம்மிடம் தருமா? ஆகையால்தான் **பிரிவினை வேண்டும் என்கின்றோம்.** திராவிடர் நாடு திராவிடர்க்கே வேண்டும் என்கின்றோம். காட்டை வெட்டி, வேலியிட்டு மரங்களைச் சாய்க்கவேண்டும் என்கின்றோம். புலி கண்டிப்பாய்ப் பதுங்கிப் பாயமுடியாது. நாட்டுப் பிரிவினையில் பொதுவுடைமை இருக்கிறது. லெனினையும், மார்க்ஸையும் நன்றாக மீண்டும் படித்துப்பார்க்கட்டும்.
>
> — அறிஞர் அண்ணா —

''என்று தணியும் இந்த சுதந்திர தாகம்; என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்''

முரசு 7 — திருவள்ளுவர் ஆண்டு 2003 ஆடி 17 (1—8—72) செவ்வாய்க்கிழமை — முழக்கம் 108

## தமிழரசு — தமிழ்க் காங்கிரஸ்

# உறவை முறியடிக்கச் சதி!

## ஆளுங் கட்சி தீட்டும் திட்டங்கள்!

## நாளிதழ்களின் பணி!

சென்ற மே மாதம் வரை பிரிந்து நின்று ஒருவரையொருவர் தாக்கி வந்த தமிழ்அரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகள் "தமிழர் கூட்டணி" என்ற பெயரில் இணைந்து, இயங்கிவருவது தமிழ் அரசியல் சரித்திரத்தில் ஒரு குறிப்பிடப்பட வேண்டிய கட்டம். இச் சம்பவம் ஆளுங்கட்சித் தலைமைப் பீடத்தைக் கண் திறந்து அவதானிக்க வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது.

அண்மைக் காலத்தில் ''வட்ட மேசை மாநாடு'', ''பேச்சு வார்த்தைகள்'', ''வெளி நாட்டுத் தூசராக நியமனம்'' என்றெல்லாம் சில அரசாங்கச் சார்பான நாளிதழ்களில் வரும் செய்திகளை அவதானித்து விசாரித்த போது, ஆளுங்கட்சியின் அரசியல் வாதிகள் சிலரின்சதி— தமிழ்க் காங்கிரஸ் — தமிழரசு இணைப்பை முறியடிப்பதற்கான சதி — ஒன்று உருவாக்கப்பட்டு அதைச் செயற்படுத்துமுகமாகவே இச் செய்திகள் வெளிவருகின்றன என அறியக்கிடக்கிறது.

இச்சதியின் அம்சமாகக் காங்கிரஸ் தலைவருக்கு ஆசை வார்த்தைகள் காட்டி, அவர் இன்னும் தமிழர் கூட்டணி நடவடிக்கையில் பங்கு கொள்ளாது இருக்கும் நிலையைப் பயன்படுத்தி, அவரைப் பிரித்துத் தனியாகச் செயல்பட வைக்கலாம் என ஆளுங் கட்சியின் சில முக்கியஸ்தர்கள் - (இதில் ஒரு தமிழரும் முன்னணியில் நிற்கிறாராம்) எண்ணிச் செயல்படுகிறார்களாம். காங்கிரஸ் தலைவரைப் பிரித்தால், ''தமிழர் கூட்டணி'' பலவீனப்படும், அதன் பின் பேச்சு வார்த்தைகள் மூலம் கோரிக்கைகளில் இங்கு மங்குமாகச் சில்லறையானவற்றை வழங்க முன் வந்தால், தமிழரசுக் கட்சியும் (கூட்டணியில் முக்கிய கட்சி அதுதானே) போராட்டப் பேச்சைக் கைவிடும் என்று ஆளுங்கட்சி கணக்குப் போட்டுச் செயற்படுகிறதாக அறியக் கிடக்கிறது.

"Politics is the art of the possible" (அரசியல் என்பது முடிந்த மட்டில் கொண்டு நடத்தும் ஒரு கலை) எனக் கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா தன்னைச் சந்தித்த ஒரு கூட்டணிப் பிரமுகரிடம் சில வாரங்களுக்கு முன் கூறினாராம். இந்தக் கூற்றுக்கு இரு வியாக்கியானங்கள் கூறலாம். ஒன்றின்படி, தமிழ் இனத்துக்கு எவ்வளவு குறைவாகக் கொடுத்து அரசாள முடியுமோ அதன்படி ஆளுங்கட்சி செய்ய முனையும். டாக்டர் கொல்வினுக்கான பதிலைத் தமிழர் கூட்டணியின் வருங் காலச் செயல்களில் நாம் காணலாம்.

## தமிழர் சுயாட்சிக் கழகம்

ஈழத் தமிழினத்தின் விடிவுக்குத் தமிழர் சுயாட்சிக் கழகம் வழி காட்டுமா? என வாசகர் பலர் வினவுகிறார்கள்.

கழகத்தின் எதிர்காலச் செயற் திட்டங்களைத் தீட்டுவதற்கு 13.8.72ல் கழக

## உங்களிடம் இல்லாத பணமா....?

நாய்க்கு எங்கே எறி பட்டாலும் காலைத்தான் தூக்கும். கம்யூனிஸ்டுத்தோழர் வ. பொன்னம்பலத்துக்கு நாட்டில் என்ன நடந்தாலும் அவருக்கு பிடிக்கா விட்டால் அது முதலாளித்துவ ஏகாதிபத்திய.........சதியாகத்தான் தோன்றும்!

கல்குடா, பட்டிருப்பு தே. ச. உறுப்பினர்கள் கூட்டணியில் சேர்ந்து கொண்டால் அது பொருள் படைத்த வர்க்கத்தின் கூட்டுறவு என்று புலம்புகிறார் வ. பொ.

பொருள் படைத்தவர்கள் யார்? அம்மா சிறிமாவோ, டாக்டர் கொல்வின், டாக்டர் விக்கிரமசிங்கா இவர்களிடம் இல்லாத நிலமும், பணமுமா தமிழ்த்தலைவர்களிடம் இருக்கிறது?

சும்மா எடுத்ததெற் கெல்லாம் முதலாளி — தொழிலாளி ஏகாதிபத்தியம் நிலப்பிரபுத்துவம் ... என்று சொல்லிக் கொண்டிருப்பதில் புண்ணியமில்லை,. இதற்குத்தானா 'சுகயீனம்' என்ற சாட்டில் மொஸ்கோவுக்குப் போய் மூளையைச் சலவை செய்து கொண்டு வருவது?

கொம்யூனிசம் ஒரு காலத்தில் 'விஞ்ஞான ரீதியான தத்

## எங்கும் 'சுயாட்சி' என்பதே பேச்சு!

### மூன்று ஆண்டுகளில் சுயாட்சிக்

### கொள்கையின் வளர்ச்சி!

காலச் செயல்களில் நாம் காணலாம்.

# ஆளுங் கட்சி தீட்டும் திட்டங்கள்!

## நாளிதழ்களின் பணி!

சென்ற மே மாதம் வரை பிரிந்து நின்று ஒருவரையொருவர் தாக்கி வந்த தமிழ்அரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகள் "தமிழர் கூட்டணி" என்ற பெயரில் இணைந்து, இயங்கிவருவது தமிழ் அரசியல் சரித்திரத்தில் ஒரு குறிப்பிடப்பட வேண்டிய கட்டம். இச் சம்பவம் ஆளுங்கட்சித் தலைமைப் பீடத்தைக் கண் திறந்து அவதானிக்க வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது.

அண்மைக் காலத்தில் "வட்ட மேசை மாநாடு", "பேச்சு வார்த்தைகள்", "வெளி நாட்டுத் தூதராக நியமனம்" என்றெல்லாம் சில அரசாங்கச் சார்பான நாளிதழ்களில் வரும் செய்திகளை அவதானித்து விசாரித்த போது, ஆளுங்கட்சியின் அரசியல் வாதிகள் சிலரின்சதி— தமிழ்க் காங்கிரஸ் — தமிழரசு இணைப்பை முறியடிப்பதற்கான சதி — ஒன்று உருவாக்கப்பட்டு அதைச் செயற்படுத்துமுகமாகவே இச் செய்திகள் வெளிவருகின்றன என அறியக்கிடக்கிறது.

இச்சதியின் அம்சமாகக் காங்கிரஸ் தலைவருக்கு ஆசை வார்த்தைகள் காட்டி, அவர் இன்னும் தமிழர் கூட்டணி நடவடிக்கையில் பங்கு கொள்ளாது இருக்கும் நிலையைப் பயன்படுத்தி, அவரைப் பிரித்துத் தனியாகச் செயல்பட வைக்கலாம் என ஆளுங்கட்சியின் சில முக்கியஸ்தர்கள் - (இதில் ஒரு தமிழரும் முன்னணியில் நிற்கிறாராம்) எண்ணிச் செயல்படுகிறார்களாம். காங்கிரஸ் தலைவரைப் பிரித்தால், "தமிழர் கூட்டணி" பலவீனப்படும், அதன் பின் பேச்சு வார்த்தைகள் மூலம் கோரிக்கைகளில் இங்கு மங்குமாகச் சில்லறையானவற்றை வழங்க முன் வந்தால், தமிழரசுக் கட்சியும் (கூட்டணியில் முக்கிய கட்சி அதுதானே) போராட்டப்பேச்சைக் கைவிடும் என்று ஆளுங்கட்சி கணக்குப் போட்டுச் செயற்படுகிறதாக அறியக் கிடக்கிறது.

"Politics is the art of the possible" (அரசியல் என்பது முடிந்த மட்டில் கொண்டு நடத்தும் ஒரு கலை) எனக் கலாநிதி கொல்வின் ஆர். டீ சில்வா தன்னைச் சந்தித்த ஒரு கூட்டணிப் பிரமுகரிடம் சில வாரங்களுக்கு முன் கூறினராம். இந்தக் கூற்றுக்கு இரு வியாக்கியானங்கள் கூறலாம். ஒன்றின்படி, தமிழ் இனத்துக்கு எவ்வளவு குறைவாகக் கொடுத்து அரசாள முடியுமோ அதன்படி ஆளுங்கட்சி செய்ய முனையும். டாக்டர் கொல்வினுக்கான பதிலைத்

## தமிழர் சுயாட்சிக் கழகம்

ஈழத் தமிழினத்தின் விடிவுக்குத் தமிழர் சுயாட்சிக் கழகம் வழி காட்டுமா? என வாசகர் பலர் வினவுகிறார்கள்.

கழகத்தின் எதிர்காலச் செயற் திட்டங்களைத் தீட்டுவதற்கு 13. 8. 72ல் கழக உறுப்பினர், ஆதரவாளர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டம் ஆனைப்பந்தி, உயர் நிலைப் பள்ளி மண்டபத்தில் கூடுகிறது.

கழகத்தின் உறுப்பினராய்ச் சேர்வதற்கும், கழகத்தின் கொள்கை விளக்கம் பெறுவதற்கும், கழகத்திற்கு இயன்றவரை பணி செய்வதற்கும் விரும்புவோர் பின்வருவோருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்:—

(1) க. சிவானந்தசுந்தரம்,
652/1, வான்ரேயன் வீதி,
கொழும்பு 13.

(2) செ. கோடீஸ்வரன்,
92A, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(3) இ. நாகேந்திரம்,
கட்டுவன்,
தெல்லிப்பளை.

கழகத்தின் கூட்டத்தின் பின் கொழும்பில் ஒரு கிளை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். கிளையில் சேர விரும்புவோரும், ஆதரவுதர விரும்புவோரும் திரு. க. சிவானந்தசுந்தரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## எங்கும் 'சுயாட்சி' என்பதே பேச்சு!

### மூன்று ஆண்டுகளில் சுயாட்சிக் கொள்கையின் வளர்ச்சி!

★ தேசிய சபையில் தமிழரசுப் பிரமுகர் திரு. வ. ந. நவரத்தினம் "'தமிழ் இலங்கையில் வாழ்கின்ற 90 சத வீதத்துக்குமதிகமான தமிழ் பேசும் மக்கள் சிங்கள மக்களிடமிருந்து முற்ருகப் பிரிந்து தனி நாடு அமைக்க வேண்டும் என்ற கருத்துடையவர்களாக இன்று இருக்கிருர்கள்'' எனக் கர்ச்சனை செய்கிருர்.

★ "'சமஷ்டிக் கொள்கையும், ஒற்றை ஆட்சிக் கொள்கையும் தோற்றுவிட்டன. எமக்கு மிஞ்சியிருப்பது சுயாட்சி ஒன்றே தான்'' எனத் தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர் திரு. வீ. ஆனந்தசங்கரி 'தினகரன்' நிருபருக்குக் கூறுகிருர்.

★ "'சிங்கள மக்கள் வேண்டுமானல் தமது பகுதிக்கு 'சிறீ லங்கா' எனப் பெயர் சூட்டட்டும். ஆனல் எமது பகுதிக்கு அப் பெயர் கொண்டு அழைக்க நாம் விடமாட்டோம்'' — கூட்டணிக் கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் முழக்கம்.

இவை யெல்லாவற்றையும் பார்க்கும் போது நாம் பெருமைப்படாதிருக்க முடியவில்லை. இந் நிலையில் எனக்குப் பழைய நினைவுகள் வருகின்றன!

தமிழர் சுயாட்சிக் கழகம் நிறுவப்பட்ட ஒரு சில வாரங்களின் பின் ஒருநாள் பின்நேரம் நான் காலிமுக மைதானத்தில் தமிழரசு பா. உ. கள் மூவரை (பொதுச் செயலாளர் திரு அமிர்தலிங்கமும், உடுவில், பருத்தித்துறைப் பிரதிநிதிகள் ஆகியோர்) சந்திக்க நேர்ந்தது. சுகசேதிகள் விசாரித்தபின் அரசியலுக்கும், எமது

விசேட நிருபர்

கழகத்திற்கும் பேச்சுத் திரும்பியது.

"'ஒரு சில இளைஞர் மத்தியில் தனி நாடு பற்றி ஆர்வம் உண்டு. ஆனல் அது பரவுவதற்கு இயக்க ஆற்றல் உங்களிடமில்லையே'' என திரு. அமிர்தலிங்கம் கூறினர். கதையின் போக்கில் நான் கூறினேன் "'ஆனல் ஒன்று, உங்கள் இலட்சியம் போலல்லாது, நாம் எமது இலட்சியத்தைப் பெற நேரடியாக இயங்கலாம். நாளைக்கு நாம் ஒரு தேசிய மாநாட்டைக் கூட்டி எமது நாட்டின் சுதந்திரத்தைப் பிரகடனப் படுத்தலாம்; ஆனல் அடுத்த நிமிடம் நாம் கைது செய்யப்பட்டு அடக்கப்படுவோம்; ஆனல் அது வேறு விடயம்'' என்று.

இதற்கு ஒருவர் சிரித்துக் கொண்டு "'இப்படித்தான் யாழ்ப்பாணக் கச்சேரியடியில் ஒரு விசரன் இருக்கிருன்; அவன், 'இது என்னுடைய கச்சேரி' என்று உரிமை கொண்டாடுகிருன்,'' என்று கிண்டல் செய்தார். நான் அன்று அதற்குப் பதில் கூறவில்லை, ஆனல் கூறியிருக்கலாம் — "'நீங்கள் யாழ்ப்பாணக் கச்சேரிக்கு உரிமை கொண்டாடுவதற்குக் கொழும்புக் கச்சேரி விசரனுடைய ஒத்தாசையை நாடவேண்டும். (தமிழரசார் கோருவது சமஷ்டிதானே); ஆனல் எமது கச்சேரி விசரனுக்கு அது தேவையில்லை'' யென்று. இந்தக் "'கச்சேரி விசரன்'' கதையின் இரண்டாம் கட்டம் சென்ற 24—2—72-ல் நடந்தது. அன்று சரஸ்வதி மண்டபத்தில் தமிழ் இன வழித் தொழிற் சங்கங்கள் புதிய அரசியலமைப்புப் பற்றி ஒரு கருத்தரங்கு நடத்தினர்களல்லவா? அதற்குக் கழகத் தலைவர் நவத்துடன் கூட்டத்திற்குச் சென்றிருந்தபோது அந்தக்

( தொடர்ச்சி 6-ம் பக்கம் )

## உங்களிடம் இல்லாத பணமா....?

நாய்க்கு எங்கே எறி பட்டாலும் காலைத்தான் தூக்கும். கம்யூனிஸ்டுத்தோழர் வ. பொன்னம்பலத்துக்கு நாட்டில் என்ன நடந்தாலும் அவருக்கு பிடிக்கா விட்டால் அது முதலாளித்துவ ஏகாதிபத்திய.........சதியாகத்தான் தோன்றும்!

கல்குடா, பட்டிருப்பு தே. ச. உறுப்பினர்கள் கூட்டணியில் சேர்ந்து கொண்டால் அது பொருள் படைத்த வர்க்கத்தின் கூட்டுறவு என்று புலம்புகிருர் வ. பொ.

பொருள் படைத்தவர்கள் யார்? அம்மா சிறிமாவோ, டாக்டர் கொல்வின், டாக்டர் விக்கிரமசிங்கா இவர்களிடம் இல்லாத நிலமும், பணமுமா தமிழ்த்தலைவர்களிடம் இருக்கிறது?

சும்மா எடுத்ததெற்கெல்லாம் முதலாளி — தொழிலாளி ஏகாதிபத்தியம் நிலப்பிரபுத்துவம் ... என்று சொல்லிக் கொண்டிருப்பதில் புண்ணியமில்லை,. இதற்குத்தானு 'சுகயீனம்' என்ற சாட்டில் மொஸ்கோவுக்குப் போய் மூளையைச் சலவை செய்து கொண்டு வருவது?

கொம்யூனிசம் ஒரு காலத்தில் 'விஞ்ஞான ரீதியான தத்துவம்' என்று பலரும் நம்பியிருந்தனர். மார்க்சும் - ஏன்ஜலும் சொன்னவை வேத வாக்கு — அதற்கு எதிர் வாக்கே கிடையாது என்று சொல்லப்பட்டது.

ஆனல் இன்று மார்க்ஸ்-ஏன்ஜல்- லெனின் இவர்கள் சித்தாந்தம்பற்றி அவரது சிஷ்ய கோடிகள் ஒருவரது குடுமியை ஒருவர் பிடித்துக்கொண்டு நடுத் தெருவில் நிற்கிருர்கள்!

இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, உருஷிய - சீனக்கம்யூனிஸ்ட்கட்சி இரண்டுமே உண்மையான பொதுவுடமைக் கட்சிகள் அல்லவென அறிக்கை விட்டிருக்கிறது!

.'வ. பொ'வுக்கு இது சமர்ப்பணம்.

## தமிழினத்தின் நோய்க்கு மருந்து கூறுவது கழகம் !

# நோயைத் தீர்க்கக் கழகத்தில் சேருங்கள்!

எஸ். கே. மகேந்திரன்

நம்பியிருந்த தலைவர்களால் மீண்டும் கைவிடப்பட்டிருக்கும் தமிழினம் புதியதோர் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு, இடைவிடாத போராட்டங்களின் மூலம் தான் இழந்த உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய காலகட்டத்திலே இருக்கின்றது.

சேர். பொன். அருணசலம் தொடக்கம் இன்றைய தலைவர்கள் வரை தேசிய ஒற்றுமை என்ற கானல் நீரைத் தேடியே அலைந்துகொண்டிருக்கின்ருர்கள். 1915-ம் ஆண்டு தொடக்கம் 1965 வரையுமுள்ள காலத்தில் சிங்கள — தமிழ்த் தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களுக்கு நேர்ந்த கதிகளைப் பற்றி அறிந்திருந்தும் கூட, தமது போராட்டங்களின் விசேட அம்சமாக — பேச்சுவார்த்தைகளை — இன்றைய தலைவர்கள் கையாளுவது மிகவும் விந்தையானது. வீறுகொண்டெழும் தமிழர்களின் போராட்ட உணர்ச்சிகளை மழுங்கச் செய்வதற்காகவே பேச்சுவார்த்தைகள் என்றும், ஒப்பந்தங்கள் என்றும் நம் தலைவர்களைச் சிங்களத் தலைவர்கள் ஏமாற்றிஞர்கள் என்பதை ஏமாற்றப்பட்ட தலைவர்கள் கூட உணராதிருப்பது மிகவும் விசனிக்கத் தக்கது.

1956-ம் ஆண்டு திருகோணமலையிலே, மகாநாடு கூடி முப்பதிஞயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்களின் முன்னிலையிலே போராட்டத் தீர்மானத்தை நிறைவேற்றிஞர்கள் தமிழரசுக் கட்சியினர். தமிழினம் களம் நோக்கிப் புறப்பட ஆயத்தமான காட்சி கண்ட அன்றைய பிரதமர் எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தமிழரசுத் தலைவர்களைப் பேச்சுவார்த்தைக்கழைத்தார். அதன் பிரதிபலனுகப் பண்டா — செல்வா ஒப்பந்தம் பிறந்தது. இந்த ஒப்பந்தத்தின் காரணமாக 1956-ல் ஆரம்பமாகியிருக்க வேண்டிய தமிழர் போராட்டம், சுமார் நான்கு வருடங்கள் தாமதமாகிச் சத்தியாக்கிரகமாகப் பரிணமித்தது. இச் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு முத்தாய்ப்பு வைத்தாற்போன்று, தமிழர் சுயாட்சுக் கழகத் தலைவர் நவத்தின் சிந்தனைத் திறனில் விளைந்த முத்திரை வெளியீடு அமைந்ததை ஈழத் தமிழினம் என்றும் மறக்க முடியாது.

ஒப்பந்தங்களையும், பேச்சுவார்த்தைகளையும் நம் தலைவர்களை மயக்குவதற்காகச் சிங்கள அரசாங்கங்கள் பாவித்தது அந்தக்காலம். ஆனல் இன்றைய நிலை என்ன? உணர்ச்சி வேகத்திஞல் உந்தப்பட்டு உரிமைபெறத் துடிக்கின்ற உத்தமத் தமிழர்களின் உணர்ச்சிகளைத் திசை திருப்பித்தாம் நினைத்ததைச்சாதிப்பதற்கு, தியாக சிந்தையும் தீர்க்க தரிசனமுமற்ற இன்றைய தலைவர்கள் கையாளும் தந்திரம்தான் இந்தப் பேச்சுவார்த்தைகள் — நம்பிக்கைகள் — காலக்கெடுகள் எல்லாம்.

பேச்சுவார்த்தைகளிலே தோல்விகண்ட பின்னர்தான் அரசமைப்பு நிர்ணயசபையைத் தமிழரசார் பகிஷ்கரித்தனர். அன்றைக்கு நம்பிக்கை இழந்தவர்கள் மீண்டும் பேசித் தீர்க்கலாம் என்ற நம்பிக்கையில் தேசிய பேரவையில் காலடி வைத்திருப்பது மிகவும் விநோதமானது. அதுமாத்திரமல்ல. அரசமைப்பைத் திருத்துவதென்ற விடயத்தை அரசமைப்பு நிர்ணய சபையிலே சாதிப்பதைவிட தேசிய பேரவையிலே சாதிப்பது மிகவும் கடினம், ஏனெனில் அரசமைப்பு நிர்ணய சபைதான் தேசிய பேரவையாக மாறியிருக்கிறதே தவிர புதிதாக அங்கத்தவர்கள் தெரியப்பட்டு தேசியபேரவை உருவாகவில்லை. இந்தச் சாதாரண உண்மையை நம் உறுப்பினர்கள் உணராதது ஏனே தெரியவில்லை. தேசியப் பேரவையில் அரசமைப்பை மாற்றும் பிரச்சினை எழுவதற்கே நியாயமில்லை.

அடுத்ததாக மூன்று மாதங்கள் போராட்டத் திட்டம் தீட்ட அவசியமாகிறது. எனவேதான் போகிருேம் என்கிருர்களாம். இங்கேதான் இவர்களின் 'தீர்க்கதரிசனம்' புலப்படுகிறது. இவர்களது 'அரசியல்ஞானமே' இவ்விடத்தில் ஒளி வீசுகிறது. அரசமைப்பு நிர்ணயசபையை விட்டு வெளியேறியபோதே இவர்கள் தீட்டப்பட்ட திட்டங்களுடன் வெளியேறியிருக்கவேண்டும். போராட்டத்திற்குரிய திட்டமில்லாமல் வெளியேறுவதில் அர்த்தமில்லையெனத்தான் இடித்துரைத்ததாகத் தமிழரசு வவுனியா பா. உ. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு தலைவர் நவரத்தினத்துடனும் என்னுடனும் உரையாடும்போது ஒரு முறை குறிப்பிட்டார். அன்றைக்கு அவருடைய தீர்க்க தரிசனம் மிகுந்த அறிவுரையை ஏற்றுத் தமிழரசார் திட்டத்தைத் தீட்டியிருக்கலாம். அல்லது ஏப்ரல் மாதத்தில் தமிழர் கூட்டணியை உருவாக்கிய பின்பாவது திட்டத்தைப் போட்டிருக்கலாம். உண்மையைச் சொல்லப்போனுல் இவர்களிடம் எந்தத் திட்டமும் இல்லை. கொள்கையும் இல்லை. ஒன்றே ஒன்றைத் தவிர. அதுதான் திரு. செல்வநாயகம் சொல்வதற்கெல்லாம் ''ததாஸ்து'' போடுவது. திரு. நவரத்தினம் சொல்வதைத்தான் ஏற்கிருர்கள் இல்லை; மாற்றுக் கட்சிக்காரர் என்ற காரணத்திற்காக. ஆனல் செல்லத்தம்புவின் கருத்துப்படியாவது செயற்பட்டிருக்கலாம் அல்லவா?

தமிழர் கூட்டணியினருக்கு நாம் சொல்லக்கூடியது ஒன்றே ஒன்றுதான். எங்களுடைய வேண்டுகோளை மீறி, தமிழ் இளைஞர்களின், மாணவர்களின் எச்சரிக்கையை உதாசீனம் செய்து பேரவைக்குப் போய்விட்டீர்கள். உங்கள் வழியிலே தமிழினத்துக்காக ஏதாவது சாதிக்க முயலுங்கள். அதைவிட்டு எங்களைப்பதவிப்பித்தர்கள்என்று காட்ட முனையாதீர்கள். 1963ம் ஆண்டிற்குப் பின் பாராளுமன்ற உறுப்பினராய் இருந்த நவத்தை 1961ம் ஆண்டு பதவியில் இருந்தார் என்று சொல்லி, பதவியில் இல்லாத போது அவர் சொன்னகருத்தைப்பதவியில் இருந்து கொண்டு சொன்ஞர் என்று குயுக்தியார் மூலம் உளறிக் கொட்ட முனைந்து மூக்குடைபடாதிர்கள். 1968ல் ஏனைய பன்னிரண்டு ''ததாஸ்து'' போடும் தம்பிரான்கள் போல அடையாள அட்டை விஷயத்தில் பெரியவர் பக்கம் நின்று பெருமாள் மாடுபோல் தலையாட்டியிருந்தால் ''நவம்'' இன்னும் எம். பி தான். ஆனல் எமக்கு பதவி பெரிதல்ல. கொள்கை தான் பெரிது. கொண்ட இலட்சியம்தான் பெரிது. இதைக் கூட்டணியினர் உணர வேண்டும்.

தமிழர் சுயாட்சிக் கழகத்தைப் பொறுத்தளவிலே, தமிழர்களின் நோயை நன்கறிந்து நோயின் காரணத்தையறிந்து, நிவாரணம் என்ன என்பதையும் தெரிந்து நிற்கின்ற ஒரு தமிழரியக்கம். ஆனல் துரதிஷ்டவசமாக நிவாரணத்திற்களிக்கப்பட வேண்டிய மருந்தை உருவாக்கத் தேவையான மூலிகை என்று சொல்லப்படுகின்ற மக்கள் ஆதரவில்லாத நிலையிலே கழகம் வாடுகிறது. பண பலமும் ஆட்பலமும் இல்லாத காரணத்திஞல் தலைவரின் நியாயமான எண்ணங்களை, போராட்டத் திட்டங்களைச் செயற்படுத்த முடியாமல் நலிகின்றது. சொற்களை வைத்துப் பந்தாடுகின்றவர்களின் மாய்மாலங்களையும், நொண்டிச் சாட்டுச் சொல்லியும், அந்தரங்க சுத்தியோடு கருத்தைச் சொல்லுபவர்களை கன்ஞபின்ஞ என்று திட்டியும் பவனிவரும் தலைவர்களையும் நம்பியிருப்பதை விடுத்துத் தமிழர் சுயாட்சிக் கழகத்திற்கு வலுவூட்டத் தமிழினம் முன்வரவேண்டும். வித்துவசிரோன்மணிகளோ பத்திரிகையில் பக்கம் நிரப்ப இடம் தரும் நன்றிக் கடனுக்காக, மக்களை மயக்க முனைவதையும், தமிழர் சுயாட்சிக் கழகம் அதைச் செய்யலாம், இதைச் செய்யலாம் என்று கூறுவதையும் விடுத்து ஒரு காலத்தில் ஒப்புக்கொண்ட கொள்கைகளை நிலைபெறச் செய்ய உழைக்க வேண்டும். அப்போதுதான் ஈழத் தமிழினம் பூரண சுயாட்சி பெற முடியும்.

# அன்று சொன்னதை இன்று சாதித்துவிட்டார்கள்!

தேசிய சபைப் பகிஷ்கரிப்பு அண்மையில்தான் ஒரு பிரச்சினையாக உருவாகி, அது பற்றி ''முடிவு' செய்யும் நாடகத்தைத் தமிழரசுக் கட்சி இரண்டு மாதங்களுக்கு இழுத்தடித்தாலும், முடிவு எப்போதோ எடுக்கப்பட்ட ஒன்றுதான். அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்தபோதே தேசிய சபையைப் பகிஷ்கரிப்பதில்லை என்று முடிவுசெய்து விட்டார்கள்.

15–8–71-ம் நாள் தினகரனில் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் பின்வருமாறு கூறியதாக ஒரு செய்தி வெளிவந்தது:

''இப்பொழுது எமது நாட்டை ஆளும் மன்றத்துக்கு எமது தொகுதிகளின் பிரதிநிதிகளாக நாம் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டோம், ஆட்சி மன்றம் என்பது ஆளும் சபையாகும். இந்தச் சபையால் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் நாம் கலந்துகொண்டோம். தமிழர் பிரச்சினைகள் சம்பந்தமாக நீதி கிடைக்காததால் அந்தச் சபையைப் பகிஷ்கரித்தோம். ஆனல் தொடர்ந்து ஆட்சி மன்றத்துக்குச் சமுகம் கொடுத்தே வருகின்ருேம். புதிய அரசியலமைப்புக்குப் பதிலாக தேசிய அசெம்பிளி அமையும். இதற்கென்றே மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் நாம். இதில் கலந்துகொள்வதில் எந்தத் தவறுமில்லை.''

பாருங்கள், ''வெட்டொன்று துண்டிரண்டு'' என ஐயத்துக்கே இடமின்றித் தமிழரசுத் தலைவர் திரு. செல்வநாயகம் கூறியுள்ளார். இந்தச் செய்தி ஒரு அபாய அறிவிப்பாக எமக்குப் பட்டது. எனவே, **எமது 1-9-71ம் நாள் இதழில் ''புதிய தேசிய சபையும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும்'' என்ற** தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிட்டோம். இன்று வித்துவான் வேதநாயகம் போன்ருேர், நாம் பகிஷ்கரிப்புக்காகப் பிரசாரம் செய்தது தற்போதைய பா. உ. களுக்குக் குழி பறிப்பதற்கு என்று பிரசாரம் செய்கிறதனுல் அக் கட்டுரையிலிருந்து ஒரு பகுதியைக் கீழே தருகிருேம்:—

''அவ்விதம் (அதாவது. தேசிய சபையைப் பகிஷ்கரிப்பு) செய்து ''துரையப்பாக்களை'' புக விடுவதா என்று கேட்கலாம்; கட்டாயம் கேட்பார்கள். அதற்கு எமது பதில் இதுதான். இன்று துரையப்பாக்கள் தலை தூக்கியதே உங்கள் ஒத்துழைப்புக் கொள்கையால்தான். நீங்கள் உண்மையான போராட்டப் பாதையில் சென்ருல் உங்களை ஒவ்வொரு இடைத்தேர்தலிலும் மக்கள் போட்டியின்றியே தெரிவார்கள்.''

1971-ல் எம்மால் எழுதப்பட்ட மேலுள்ள பந்தியையும், 15-8-71-ல் திரு. செல்வநாயகத்தால் கூறப்பட்டதையும் இன்றைய சூழ்நிலையில் வாசிக்கும் நடுநிலையாளர் எமது உள்ளத் தூய்மையையும் தமிழரசுக் கட்சியினரால் ஆடப்பட்ட கபட நாடகத்தையும் உணரத் தவறமாட்டார்கள்!

# ஊழல் நிறைந்த மாநகரசபை!

''கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடிபுகுந்தது.'' என்று ஒரு பழமொழி உண்டு. யாழ்ப்பாண மத்திய சந்தை பலரது முயற்சியால் பல வருடங்களுக்கு முன் தொடக்கப்பட்டது.

முந்நாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவால் அடிக்கல் நாட்டப்பட்டது

முந்நாள் மந்திரி திருச்செல்வத்தால் கடன் வசதி செய்து கொடுக்கப்பட்டது.

விசேட ஆணையாளர்களால் பழைய கடைக்காரர்களுக்குத் தற்காலிக கடைகள் கட்டிக் கொடுக்கப்பட்டது. இடம் காலியாக்கப்பட்டது.

முந்நாள் மேயர் நாகராஜா காலத்தில் கேள்விகள் கோரப்பட்டு, ஒப்பந்தம் எழுதப்பட்டு வேலைகள் ஆரம்பமாகின.

முந்நாள் மேயர் துரைராசா காலத்தில் முக்கால்வாசிவேலைகள் பூர்த்தியாகின.

இந்நாள் மேயர் காலத்தில் மிகுதி வேலை பூர்த்தியாக்கப்பட்டது.

ஆனல் சந்தைக் கட்டிடத்தைத்திறந்து வைத்தபொழுது சந்தை கட்டி முடித்தபெருமை அத்தனையும் தன்னுடையது என்று பேசினர்.

அவர் அப்படித்தான் பேசுவார். 'யாழ்ப்பாண விளையாட்டு அரங்கு' என்று இருந்ததை இரவோடு இரவாக, 'துரையப்பா விளையாட்டு அரங்கு' என்று அறிவிப்புப் பலகை போட்ட ஒரு மனிதன் அப்படிப்பேசுவதில் ஆச்சரியப்பட ஏதாவது இருக்கிறதா?

போகிற போக்கில் மாநகர சபையால் கட்டப்படும் மலகூடங்களுக்குக்கூடத் துரோகப்பரது பெயர் பொறிக்கப்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

சரி, மாதிரிச் சந்தைதான் கட்டி முடிக்கப்பட்டது. அது சந்தைமாதிரியா காட்சியளிக்கிறது? மாதிரிச் சந்தையில் முன்பு திட்டமிட்டபடி இருக்க வேண்டிய கடைகள்:-

மரக்கறி, மீன், மீன்கருவாடு, இறைச்சி, பழங்கள்.

இப்பொழுது இருப்பது? சிகை அலங்கார நிலையங்கள், துணி வெளுக்கும் கடைகள், சர்பத் கடைகள்.........பார்க்கவே அசிங்கமாக இருக்கிறது.

சோழியன் குடுமி சும்மா ஆடுமா? காரண காரியத்தோடுதான் கடைகள் இப்படி ஒதுக்கப் பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு கடைக்கும் ஆறுயிரம் தொடக்கம் பத்தாயிரம் மட்டும் இலஞ்சம் வாங்கப்பட்டதாம்.

ஆளும் கோஷ்டியைச் சார்ந்த மதிப்புக்குரிய மாநகர சபை உறுப்பினர்களுக்கு ஆளுக்கு இரண்டு கடைவீதம் கொடுக்கப்பட்டதாம்!

அவர்களில் ஒருவர் திடுதிப்பெனப் பெரிய வீடொன்றுக்கு அத்திவாரம் போட்டுவிட்டாராம், 'போட்டுவிட்டாராம்' 'என்ன? போட்டேவிட்டார்!

போதாக்குறைக்கு துரோகப்பரும் அவரது கையாட்களும் சேர்ந்து களியாட்ட விழா ஒன்று நடாத்தப் போகிருர்களாம். இதில் வசூலாகும் பணம் ஒழுங்காக மாநகர சபைக்கு வந்து சேருமா? அல்லது மாதிரிச் சந்தை மாதிரித் தங்கள்தங்கள் பைகளை நிரப்ப இது ஒரு திரைமறைவுச் சூழ்ச்சியா? இப்படிக் கேட்கிருர்கள் பொதுமக்கள்.

## பிணமென நினைத்தால்......!

நல்லூர்த் தொகுதியில் அண்மையில் ஒரு மரண ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது.

வழக்கம் போல - சமயாசாரப்படி வழி நெடுக நெல்லுப் பொரி வீசிக்கொண்டு போஞன் குடிமகன்.

அப்படி வீசிய நெல்லுப் பொரி சில, எதிர்பாராத விதமாக அந்த வழியாக வந்த தேசியப் பேரவை உறுப்பினரது காரிலும் விழுந்து விட்டதாம்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

தமிழர்க்குத் தொண்டு செய்யும் தமிழனுக்குத்

(சென்ற ஆண்டு ஜூனில் தமிழரசுக் கட்சியினர் அரசியல் நிர்ணயசபையைப் பகிஷ்கரிக்கத் தொடங்கியபின், கீழுள்ள தலைப்பில் 1.8.71-ம் நாள் இதழில் தொடங்கி நான்கு இதழ்களில் எமது கருத்தினை வெளியிட்டோம். உங்கள் திட்டம் என்ன? பகிஷ்கரிப்பு வெறும் பாலை வனத்துக்கல்லவா கொண்டு செல்லும்! தினபதியுடன் சேர்ந்து சதி செய்கிறீர்கள் என்றெல்லாம் பழி சுமத்துகிறவர்கள், நாம் என்னதான் கூறினாலும், புதிய புதிய பழிகளைத் தொடர்ந்தும் சுமத்துவார்கள். ஆனால் நடு நிலைமையிலுள்ளவர்களின் சிந்தனைக்காக அந் நான்கு கருத்துக்களையும் இவ்விதழில் முழுமையாக வெளியிடுகிறோம். தணிக்கை செய்யப்பட்ட பகுதிகளை அடைப்புக்குள் வெளியிடுகிறோம்; — ஆசிரியர்)

# இனிச் செய்யவேண்டியது என்ன?

## (i)

## 1-8-71

எமது ஏடு தமிழர் சுயாட்சிக்கழகத்தையும் அதன் தனி ஆட்சிக் கொள்கையையும் ஆதரிக்கும் ஏடு என்பது நாடறிந்தது. இருந்தும் இன்று நாம் அரசியல் கட்சிகளுக்கும் அவை வளர்க்கும் குறைபாடுகளுக்கும், போட்டிகளுக்கும் அப்பாற் பட்ட நிலையில் இருந்து, ஈழத்தமிழினத்தின் எதிர் காலம் ஒன்றையே மனதில் வைத்து எழுதுகிறோம்.

சில காலமாக எமது மனதில் உருவாகிவந்த கருத்துக்களுக்கு முழு உருவத்தைக் கொடுக்க உதவியுள்ளன சில அன்பர்களிடமிருந்து அண்மையில் வந்த கடிதங்கள். குறிப்பாகத் தமிழ்ப் பெரியார் வித்துவான் நி. மே. யோ. வேதநாயகம் அவர்களைக் குறிப்பிட விரும்புகிறோம். அப் பெரியார் உரிமையுடன் எம்மில் சில குறைகளைக் கண்டுள்ளார் — கண்டித்துமுள்ளார்.

இவ்விதம் இவர்கள் போன்றோர் கடித மூலமும், வேறு பலர் நேரிலும் எம்மைக் கேட்க வைப்பது ஒன்றே ஒன்றுதான். இனிச் செய்வதும், செய்ய வேண்டியதும் என்ன என்பது தான்.

நாம் வாழும் நிலப்பரப்பில் எமது மொழிக்குச் சமத்துவம் இருந்த நேரத்திலும், எமது குழந்தைகளுக்குத் தொழில் வாய்ப்புகளிலும் ஏனையவற்றிலும் பாரபட்சம் காட்டப்படாத காலத்திலேயே ஈழத் தமிழினம் வருங்காலத்தில் தனி இனமாக, தன்மானத்துடன் வாழவேண்டுமானால் தமிழ் மக்களுக்கு ஒரு தமிழரசுவேண்டுமென்ற முடிவுக்கு வந்தவர்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சி என்னும் பெயருடன் ஒரு கட்சியை உருவாக்கினர். தமிழரசை, முடிந்தால் ஒரு சமஷ்டி அமைப்புக்குள், முடியா விட்டால் புறம்பாக அமைப்பதே இக்கட்சியின் நோக்கு. ஆனால் காலக்கிரமத்தில் சமஷ்டி அரசுதான் கட்சியின் இலட்சியம் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. இந்நிலை எப்படி வந்தது என்பதை இன்று ஆராய்வதில் பயனில்லை.

மறு புறம் சிங்கள மக்களுடன் சகோதர மனப்பான்மையுடனும், சமத்துவ அடிப்படையிலும் ஒத்துழைப்பது தான் இனத்துக்கு நல்லது என தமிழ் காங்கிரஸ் பிரசாரம் செய்தது.

இன்று இரு கட்சிகளின் கொள்கைகளையும் சிங்கள மக்கள் ஒரே குரலில், எதுவித கட்சிவேற்றுமையும் இன்றி, அரசியல் நிர்ணயசபையில் நிராகரித்திருக்கிறார்கள். இனிமேல் சமஷ்டி அமைப்புப் பற்றிப் பேச்சுக்கே இடமில்லை என்று அடித்துக் கூறி விட்டார்கள் சிங்கள மக்களின் பிரதிநிதிகள். அதே போன்று தான் சமத்துவ அடிப்படையில் ஒத்துழைக்கலாம் என்று நம்பியிருந்த தமிழ்க் காங்கிரசின் கொள்கையும் நிராகரிக்கப் பட்டுவிட்டது. காங்கிரஸ் நாமத்தை இன்னும் தாங்கித்திரியும் பா.உ. களையிட்டு நாம்ஒன்றும் கூறுவதற்கில்லை. காங்கிரஸ் ஸ்தாபனத்தால் அரசியல் நிர்ணய சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டது தான் முக்கியம்.

அரசியல் நிர்ணய சபையில் திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் தனது கடைசிப்பேச்சில், சிலர் மொழி விஷயத்தில் அரசாங்கம் தருவதைத் தற்போதைக்கு ஏற்றுப் பின்னர் மேலும் பெறப் பாடுபடுவது தானே என்று கேட்கிறார்கள் என்றும், ஆனால் அரசியல் அமைப்பில் தற்போது இடம் பெறப்போவது வருங்காலச் சந்ததிகளைப் பாதிக்கப் போவதால் தாம் அவ்வாதத்தை ஏற்க முடியாதென்றும் குறிப்பிட்டார். அதாவது தற்போது உருவாகும் அரசியல் அமைப்பைத்திருத்துவதென்பது எத்தனையோ சந்ததிகாலத்திற்கு முடியாத காரியம் என்பதனை ஏற்றுப்பேசினார். மொழி விஷயத்தில் நிலை இதுவென்றால் ஆட்சிமுறைத் திருத்தங்களுக்கும் இதே நிலை தான் என்று கூறவும் வேண்டுமா?

ஆகையால் தாம் தொடர்ந்தும் சமஷ்டி அமைப்புக்குப் போராடுவோம் என்று தமிழரசுக் கட்சியினர் கூறினாலோ, அல்லது சகோதர சமத்துவ அடிப்படையில் ஒற்றை ஆட்சியின் கீழ் வாழும் உரிமைக்காகப் போராடுவோம் என்று காங்கிரசார் கூறினாலோ, இரு சாராரும் தம்மையும், ஈழத் தமிழ் இனத்தையும் ஏமாற்ற முனையுங் குற்றத்திற்காளாவர்.

இந்நிலையில் தமிழினத்தின் அடுத்த நடவடிக்கை என்ன என்பது தான் ஈழத் தமிழினத்தை வாட்டும் இன்றைய கேள்வி. இதற்கு விடை காண்பதற்குச் சரித்திரத்தை நாம் சற்றுப் புரட்டிப் பார்க்க வேண்டும்.

இந்நிலப்பரப்பிற்கு போர்த்துக்கேயர் முதல் முதலில் வந்தபோது தமிழ் அரசும், இரு சிங்கள அரசுகளும் புறம்பாக இயங்கி வந்தன. தமிழ் அரசையும் கீழ் நாட்டுச் சிங்கள அரசையும் தனித் தனியே தான் போர்த்துக்கேயர் கைப்பற்றினர் — அப்பிரதேசங்களைத் தனித் தனியேதான் ஆண்டும் வந்தனர். ஒல்லாந்தர் காலத்து நிலையும் அதே தான். கடைசியாக வந்த ஆங்கிலேயர் கண்டி அரசைக் கைப்பற்றிய பின்பும் 30 ஆண்டு காலமளவில் தமிழ்ப் பகுதியையும் சிங்களப் பகுதியையும் தனித் தனியாகத்தான் ஆண்டு வந்தனர். ஐக்கிய இலங்கை என்பது ஆங்கிலேயரால் தமது நிர்வாக வசதிக்காகச் செய்யப்பட்ட ஒழுங்கு.இது சரித்திரம். இந்தப்பேருண்மையைத் தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள், சேர். பொன் அருணாசலம் தொடக்கம் தமிழரசார் வரை, எக்காரணத் தாலோ மறந்து விட்டதும், தமிழ் மக்களிடமிருந்து மறைத்து விட்டதும் எமது இனத்தின் துர்ப்பாக்கியம்.

தமது நிர்வாக வசதிக்காக உருவாக்கப் பட்ட 'ஐக்கியம்' இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கும் போது பண்டைய தமிழ், சிங்கள இராச்சிய மக்கள் எல்லோரிடமுமே, தமிழ் மக்களுக்காகச் சில பாதுகாப்புகளுடன் - உ-ம் 29ம் பிரிவு, கையளித்ததுச் சென்றனர். 1956-க்குப் பின் உருவாகிய நிலை புதிய அரசியலமைப்பால் உச்ச நிலையை அடையப் போகிறது-எமக்குத்தற்போது இருக்கும் அற்பசொற்ப பாதுகாப்பும் அற்று.

இலங்கைக்கு ஆங்கிலேயரால் அளிக்கப்பட்ட சுதந்திரத்தின் வாரிசுகள் இரு இனங்கள். ஆனால் புதிய அரசியலமைப்பால் ஒரு வாரிசு — சிங்கள மக்கள், சுதந்திரத்தின் பலனைத்தாம் மட்டும் அனுபவிக்கப் போகிறார்கள்; தமிழ் மக்கள் சுதந்திரத்தின் தமது பங்கை இழக்கப் போகிறார்கள்.இந்நிலையில் எமக்கு ஒரே ஒரு வழிதானுண்டு! போர்த்துக்கேயர் இந் நாட்டைக் கைப்பற்று முன் இருந்த நிலைக்கு மீண்டும் செல்ல வேண்டும் என்றுகோருவதே! அதனைக் கோரவும் அதனைப் பெறுவதற்கான வழி வகைகளைக் கையாளவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அந்த வழி வகைகள் தானென்ன? அடுத்த இதழில் ஆராய்வோம்!

## (ii)

## 15-8-71

(இப்பகுதி முழுமையும் முன்பு தணிக்கை செய்யப்பட்டது)

(இந்தக் கேள்விக்குச் சென்ற இதழில் நாம் கண்ட பதில் நேயர்களுக்கு நினைவிருக்கும் — ''போர்த்துக்கேயர் இந் நாட்டைக் கைப்பற்றுமுன் இருந்த நிலைக்கு மீண்டும் செல்ல வேண்டுமென்று கோருவதற்கும் அதனைப் பெறுவதற்கான வழி வகைகளைக் கையாளவும் கடமைப்பட்டுள்ளோம்'' என்று.

வழி வகைகளை ஆராயுமுன் முக்கியமான விடையம் ஒன்றுண்டு. அதுதான் எமது பிரதேசத்திற்கு ஒருபெயர். ''நம் நாடு'' ''எம் மூதாதையர் நாடு'' ''எம்வழித்தோன்றல்களின் நாடு'' ''நாம் விடுதலை காணத் துடிக்கும் நாடு'', இதற்கு ஒரு உருவைக்கொடுப்பதற்காக, அதனை ஒரு தாரக மந்திரமாக எப்போதும் உச்சரிப்பதற்காக ஒரு பெயர் வேண்டும். அன்று ஜின்னா ஒரு ''பாகிஸ்தானை'' உருவாக்கத் தனது மக்களின் துணையை நாடினார். இன்று ''வங்களா தேச'' த்திற்காக றஹ்மான் தனது மக்களின் சுதந்திர உணர்ச்சியைத் தூண்டினார்.

இலங்கையில் ஒரு தமிழரசைக்காணப் புறப்பட்ட கட்சி அவ்வரசு ஆளும் பிரதேசத்திற்கென ஒரு பெயரைத் தொடக்கத்திலிருந்தே ஏன் தேர்ந்தெடுக்கவில்லை என்பது எமக்கு ஒரு புதிராகத்தான் இருந்து வந்தது. வெறும் ''வட—கிழக்கு மாகாணங்கள்'' என்ற பதத்தில் உள்ளத் துடிப்பைக்காண முடியவில்லை. ஏன்? ஒற்றுமை உணர்வையே காண முடியவில்லை. வடக்கும் கிழக்கும் வெவ்வேறு பிரதேசங்களென்ற பிரிவுணர்ச்சியைத் தூண்ட இடமளிக்கிறது. இந்தக் குறைபாடு சுட்டிக் காட்டப்பட்ட போது அதனை நிவிர்த்தி செய்யக்கட்சி நடவடிக்கை எடுத்தது; பொருத்தமான பெயரைச் சிபார்சு செய்பவருக்குத் தங்கப் பதக்கம் தர முன் வந்தார் கட்சித் தலைவர் திரு. இராசமாணிக்கம். ஆனால் இம் முயற்சி இடை நடுவில் கைவிடப்பட்டதையிட்டு வருந்துகிறோம். இருந்தும் காலந் தாழ்ந்துவிடவில்லை — இந்தக் குறைபாட்டை நிவர்த்திசெய்ய!

எம்மைப் பொறுத்த வரையில், பண்டு தொட்டு இன்று வரை எமது மொழியில் இருந்து வரும் சொல் இருக்கிறது. ஈழம் — எமது பிரதேசத்தைக் குறிப்பிட. இந்தச் சொல்லின் பொருத்தத்தைத் தமிழ்ப்புலவர் ஒருவர் எமக்கு விளக்கியுள்ளார், பின்வரும் ரீதியில்:

ஆதியில் இந்நாட்டின் பூர்வீகக் குடிகளாகத் தமிழர் வாழ்ந்த போது அதற்குப் பெயர் இலங்கையல்ல, ஈழம் தான். காலக் கிரமத்தில், சிங்களவரின் வருகையால் ஈழத்து மக்கள் வட கிழக்குப் பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட பின் அவர்கள் ஒதுங்கிய பகுதிக்கும் பண்டைய பெயரான — ஈழம் — பாவிக்கப்பட்டு வந்ததாம். இதனை நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர் என்பார் கூறியுள்ளார் என்று புலவர் அவர்கள் கூறினார்.

ஆகவே ஈழம் என்ற பழந் தமிழ்ப் பெயரை எமது பிரதேசத்திற்கு ஒரு மனதுடன் பாவிப்போம். ஈழம் திரு. சுந்தரலிங்கம் பாவித்த பெயர் என்று தமிழரசு நண்பர்கள் கூறினால் அது சுந்தரலிங்கம் தோற்றுவித்த சொல்லல்ல, அது பழந் தமிழ்ச்சொல், நம் மூதாதையர் காலந்தொட்டு வழக்கிலிருந்து வரும் சொல், நாம் இந் நாட்டின் பூர்வீகக் குடிகள் என்ற இறுமாப்பை எமக்கு ஊட்டுவிக்கும் சொல் என்பதனைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். வள்ளுவர் தானே கூறியுள்ளார்,

''எப்பொருள் யார் யார்
வாய்க் கேட்பினும்
அப்பொருண் மெய்ப்
பொருள் காண்பதறிவு''

என்று.

தமிழரசுக்கட்சியின் தோற்றத்துடன் உருவாகிய ''தமிழரசு'' இன்று வழக்கில் வந்துள்ளதை நாம் ஏற்கிறோம். திரு. சுந்தரலிங்கமே இப்பதத்தை ஏற்பதில் ஆட்சேபனையில்லை என்று வல்வை மாநாட்டில் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார்.

ஆம், நமக்கொரு ''தமிழரசை'' உருவாக்க முனையும் போது 'அந்த அரசு ஆளக் கூடிய இடத்தைப் பழைய தமிழ்ச்சொல்லால்-ஈழம் என்பதாக ஒரு மனதுடன் அழைப்போம்.

ஈழம் எங்கள் தாய். தாயின் விலங்கினை ஒடிக்கப் புறப்படு முன் அந்த உரிமைக்கு எம்மை நாம் தயார் செய்துகொள்ள வேண்டும். எப்படி? அடுத்த இதழில் பார்ப்போம்.)

## (iii)

## 1-9-71

விடுதலை வேண்டி நிற்கும் எந்த ஒரு இன மக்களும் தமது கிளர்ச்சிகளைத் தொடங்குமுன் தம்மைத்தாம் தயார் படுத்தவேண்டும்.

எம்மைத் தயார்ப் படுத்துவதற்கு எம்மில் உள்ள குறைபாடுகளைக் களைய வேண்டும். அதே நேரத்தில் வேறு சில குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

முதல் தேவையானது தனியொரு குறிக்கோளும், அரசியல் ஒற்றுமையும்.

அத்துடன் தேவை சமுதாய ஒற்றுமையும், பிரதேச ஒற்றுமையும். தியாக மனப்பான்மையும், பொருளாதாரத்தன் நிறைவும்.

இவற்றில் அரசியல் ஒற்றுமையைப் பற்றி எழுதுவது சிக்கலானது; ஆகையால் அதனைக் கடைசியில் விட்டு விடுவோம்.

இன்று எமது சமுதாயத்தை அரித்து வருபவற்றுள் இரு குறைபாடுகள் பளிச்சிடுகின்றன: சாதிக் கொடுமை, சீதனக் கொடுமை.

எமது சமூகத்தில் ஒரு கணிசமான பகுதியினருக்கு மனித உரிமைகள் வழங்கப்படாது இருக்கும் நிலையில் நாம் விடுதலையை அனுபவிக்க அருகதையற்றவர்களாவோம். காந்தி மகாத்மாவும் சுதந்திரப் போராட்டத்தோடு தீண்டாமையை ஒழிக்கப் போராடினார்; அதனால் அவரது விடுதலைப் போராட்டமும் ஆத்மசுத்தி உடையதாக விருந்தது.

சாதிக் கொடுமை எம்முள் ஒற்றுமையின்மையை ஆக்குகிறது. சீதனக் கொடுமை எம்மை வேறு விதங்களில் பலவீனப்படுத்துகிறது. பெண்ணைப் பெற்றவன் குழந்தை பிறந்ததிலிருந்து பணம் சேகரிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறான். சேகரிக்கும் முறையின் நேர்மையைப் பற்றி அக்கறையில்லை; சேரும் பழி பாவங்களைப் பற்றி அச்சமில்லை. இப்படிச் சேர்த்து ஒரு உயர்ந்த உத்தியோக மாப்பிள்ளையைத் தேடிப் பிடிப்பதில் முனைகிறான். படித்துப் பட்டம் பெற்றவனும் சீதன வலையில் விழுகிறான். இந்நிலையில் நற் பண்புக்கும், கண்ணியத்திற்கும் மதிப்பற்றுப் போகிறது; உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை இல்லாமற்போகிறது. தன் நலமும், பேராசையும் தலை தூக்குகிறது. தியாக சீலர்களையும், பழிபாவத்துக்கு அஞ்சுபவர்களையும் சமுதாயம் படைக்க முடியாது போகின்றது.

எமது மத்தியில் உள்ள குமாரசூரியர்களையும், துரையப்பாக்களையும், தியாகராசாக்களையும் துரோகிகள் என்று திட்டினால் பிரச்சினை தீராது. இவர்களின் அரசியல் அந்தஸ்திற்காக இவர்களுக்குப் பின்னால் பல்லிளித்து நிற்க ஒரு திருக்கூட்டம் உண்டு; அதனை உருவாக்கியது எமது சமுதாயச் சீர்கேடு என்பதை உணர்ந்து அக் குறைபாடுகளையும், அவற்றுக்கு மூல காரணமாயுள்ள சீதனக் கொடுமையையும் நாம் அகற்றுதவரை விடுதலைப்போருக்கு எம்மை நாம் தயாராக்க முடியாது.

பொருளாதாரத் துறையில் தன் நிறைவு காணும் வரை எந்தப் போராட்டமும் சில நாட்களில் பிசு பிசுத்துப் போய்விடும். தமிழ்பகுதியில், யாழ்ப்பாணம் கணிசமான அளவு தென் இலங்கை வியாபாரங்களிலும், அரசாங்க சேவையிலும் தங்கியிருக்கிறது. இந்நிலை கண்டிப்பாக மாறவேண்டும். இந்த விதத்தில் தேடப்படும் வருவாயிலும் பார்க்க மேலதிகமாக மிளகாய்ப் பயிர் செய்கையால் மாத்திரம் தேட முடியும் என்பதைச் சென்ற இதழில் ஒரு செய்தி மூலம் காட்டியிருந்தோம்.

பொருளாதாரத் தன்நிறைவுக்கு முக்கிய தடையாக விளங்குவது, இலங்கை நிலப்பரப்பு முழுவதிலும் எமக்கு ஒத்த உரிமை உண்டென்று நாம் பகற் கனவு காண்பதால் தான். இதற்கு உடந்தையாகவுள்ளது சமஷ்டி அரசமைப்புப் பிரசாரம் என்பதை நாம் மறக்கக் கூடாது. சமஷ்டித் தலைவர்கள் கொழும்பில் வாழ்ந்தும், தென்னிலங்கையில் தொழில் வாய்ப்புகளை வைத்தும், முதலீடு செய்து வாழ்ந்து வருவதால் எத்தனையோ தமிழ் மக்கள் எத்தனையோ கோடிக்கணக்கில் தென் இலங்கையில் முதலீடு செய்துள்ளனர். அது மட்டுமின்றி எத்தனையோ இளைப்பாறியவர்கள் இங்கு வாழ்ந்து தமது வருவாய் முழுவதையும் செலவிடுகின்றார்கள். இதனால் —

எமது பிரதேசம் முதலீடின்றி வளம் குன்றுகிறது. வேலை வாய்ப்புக்களின் குறைவால் இளைஞர்கள் இன்னும் தென் இலங்கையைத்தான் நாடுகிறார்கள்.

இரு விதத்தாலும் நாம் பலவீனப் படுகிறோம். கடைசியில் அரசனை நம்பிப் புருஷனை

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

**தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!**

தமிழ் இன விரோத

# பத்திரிகைகளைப் பகிஷ்கரிப்போம்!

எமது தமிழினத்திலே இதுவரையில்லாத ஒற்றுமை உணர்வு இப்போது வளர்ந்து வருகிறது. காரணம் எமக்குப் பெரும்பான்மையினரால் ஏற்படும் நெருக்கடியே. இதன் காரணமாக ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற உணர்ச்சி தமிழ்த் தலைவர்களிடையேயும், தமிழ் மக்களிடையேயும் வளர்ந்து வருவதைக் காண முடிகிறது.

இந்த உணர்ச்சிதான் எமது இனத்துக்கு விடுதலை வேண்டுமென்ற வேட்கையை ஏற்படுத்தியுள்ளது. இத்தருணத்திலே தமிழ் மக்களது முக்கிய கடமை எமது விடுதலைக்காகவும் எதிர்கால நல்வாழ்வுக்காகவும் பாடுபடுகின்ற ஏடுகளை ஆதரிக்க வேண்டியதும், அதே நேரத்தில் எமது இனத்தவரின் விடுதலையுணர்வைக் கேலி செய்யும் ஏடுகளையும், எமது உரிமைகளைத் தர மறுக்கின்ற, எமது கோரிக்கைகளை ஏற்க மறுக்கின்ற அரசாங்கத்துக்கு ஆதரவாகச் சிங்கள முதலாளிமார்களால் நடாத்தப்படும் ஏடுகளையும் தமிழ் மக்கள் முற்றாக நிராகரிக்க வேண்டும் என்பதே!

தமிழினமே சிந்தித்துப் பார்! தினபதி, சிந்தாமணி இன்னும் புதுயுகம், போன்ற ஏடுகள் முழுக்க முழுக்க அரசாங்கச் சார்பானவை. இவ்வேடுகளை நடாத்துபவர்களுக்கு தமிழினத்தின் வேதனை தெரியாது, புரியாது. இவர்களின் ஒரே நோக்கம் எப்படியாவது அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்கி இருக்குமட்டும் சுகபோக வாழ்வை அனுபவிக்கவேண்டுமென்பதே. இவர்களுக்குத் தமிழினம் விடுதலை பெற வேண்டும் என்பதிலோ அன்றித் தமிழ் மக்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகள் கிடைக்க வேண்டுமென்பதிலோ கிஞ்சித்தும் அக்கறை கிடையாது. ஆனால் எம் இனத்தவரால் நடாத்தப்படும் விடுதலை, சுதந்திரன் போன்ற ஏடுகள் தமிழினத்தவருக்காக எம் இனத்தின் விடுதலைக்காகப் பல வகைகளில் பணியாற்றி வருகின்றன. நாம் பாடுபட்டு உழைக்கும் பணத்தை எமது அடிப்படை உரிமைகளைத் தர மறுக்கின்ற சிங்கள முதலாளிமார்களால் நடாத்தப்படும் தினபதி போன்ற ஏடுகளுக்குக் கொடுக்கலாமா? கூடாது! அப்படிக் கொடுப்பதாயின் எம்மை அழிக்க நினைக்கும் எதிரிக்கு நாமே பணத்தைக் கொடுத்து, அதற்கு வழிவகை செய்வது போலாகும்.

இன்றைய சூழ்நிலையில் நாம் ஒன்றுபட்டிருக்கும் வேளையில் எமது ஒற்றுமையின் பலத்தைக் காட்டவும், எமது விடுதலையின் முதல் படியாக வட கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களும், ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்களும் தினபதி, சிந்தாமணி போன்ற ஏடுகளைக் காசு கொடுத்து வாங்கும் பழக்கத்தை முற்றாகக் கைவிடவேண்டும். இவ் ஏடுகளை வாங்காமல் விடுவதால் பொலிசும் ஒன்றும் செய்ய முடியாது, இராணுவத்தினரும் ஒன்றும் செய்ய முடியாது, அரசாங்கமும் ஒன்றும் செய்ய முடியாது. பதிலாக நாம் எமது இனத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகின்ற ஏடுகளுக்குப் பணத்தைக் கொடுப்போம். அதன் வளர்ச்சிக்கு உண்மையாக ஒத்துழைப்புக்கொடுப்போம்.

இந்தத் தினபதி, சிந்தாமணி போன்ற ஏடுகளைப் பார்க்க விரும்புபவர்கள் வாசிகசாலையில் சென்று பார்த்துக்கொள்ளலாம். பலர் நினைக்கலாம் எல்லோருக்கும் இந்த வசதி கிடைக்குமா என்று. எல்லோருக்கும் வசதி கிடைக்காதுதான். இந்த ஏடுகள் வர முன் நாம் வேறு ஏடுகளைப் பார்த்து வாழவில்லையா? வாழ்ந்தவர்கள் தானே!

தமிழ் மக்களே, நீங்கள் இன்றிலிருந்து உங்களால் முடிந்த அளவுக்கு இந்தப் பிரச்சாரத்தை மேற்கொள்ளுங்கள். ஒவ்வொரு தொகுதி தோறும் மாணவர்கள், பெரியோர்கள், தமிழுணர்ச்சியுள்ள அத்தனைபேரும் இது எமது விடுதலைப் போரின் முதல் முயற்சியாக எண்ணி இத்தகைய ஏடுகளை மக்கள் வாங்குவதை முற்றாகத் தடை செய்ய வேண்டும். இப்பணியை முழு மூச்சாகச் செய்வோமானால் இவ் ஏடுகளின் மூடுவிழாவுக்கு விரைவில் வழி வகுப்போம். எமது ஒற்றுமையின் பலத்தை அரசாங்கத்துக்கு உணர்த்துவோம். இவ் ஏடுகளின் மூடுவிழாவுக்கு இப்போதிருந்தே ஆயத்தம் செய்வோம்.

தமிழினமே, நாம் இனி மேல் நமது இலட்சியத்துக்காக, நமது சுதந்திரத்துக்காகப் பாடுபடும் ஏடுகளை வாங்குவோம். அவற்றின் வளர்ச்சிக்காக எமது முழுமையான ஆதரவை நல்குவோம். அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்கும் ஏடுகளையும், எமது இலட்சியங்களைக் கேலி செய்யும் ஏடுகளையும், நமது உரிமையைத்தர மறுக்கின்றவர்களுக்காக, பறிக்கின்றவர்களுக்காக ஆதரவளிக்கும் ஏடுகளையும் வாங்காது விடுவோம் என்று சபதம் எடுப்போமாக.

வளரட்டும் எமது பகிஷ்கரிப்பு இயக்கம்!

ஒழியட்டும் துரோக ஏடுகள்!

மலரட்டும் தமிழரின் சுதந்திர வாழ்வு!

சி. ஆனந்தன்
திருகோணமலை.

---

## இங்கிலாந்தில் ஈழத்தமிழர் அபிவிருத்தி முன்னணி ஆரம்பம்!

ஈழத் தமிழகத்தை அபிவிருத்தி செய்து அங்கு நிலவி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கிச் சமுதாய நல்வாழ்வுக்கு வழி வகுக்கும் நோக்குடன் ''ஈழத்தமிழர் அபிவிருத்தி முன்னணி'' என்னும் இயக்கம் ஆரம்பமாகியுள்ளது! மேற்படி முன்னணியின் நிர்வாகக்குழு அண்மையில் அமைக்கப்பட்டுச் செயல்பட ஆரம்பித்துள்ளது. ஈழத்தமிழகப் பொருளாதார முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் இந்த முன்னணியில் சேர அழைக்கப்படுகின்றார்கள். கூடிய விபரங்கட்குத் தொடர்பு கொள்க:-

செயலகம், ஈழத் தமிழர் அபிவிருத்தி முன்னணி, 84 Manor Avenue, Brockley, London S E 4.

---

# இனிச் செய்யவேண்டியது என்ன?

(3-ம் பக்கத் தொடர்)

இழந்த கதையாகாமல் இருக்க வேண்டும் என்பதே எமது அவா. முழு இலங்கைக்கும் உரிமை கொண்டாடி ஈற்றில் எமது பிரதேசத்தையும் இழக்க நேரிடக் கூடாது. (முஜிபுர் றஹ்மானும் வங்காளிகளும் மேற்குப் பாகிஸ்தானில் வாழ்ந்து அங்கு குடியேறி முதலீடுகளைச்செய்திருந்தால் இன்று வங்காள தேசப் பேச்சே கிளம்பியிராது என்பது ஞாபகமிருக்கட்டும்.)

## (iv)
## 15-9-71

(எமது உரிமைக் கிளர்ச்சியைத் தொடங்கு முன்) மூன்று துறைகளில் - அரசியல் ஒற்றுமை, சமுதாயச் சீர் திருத்தம், பொருளாதாரத் தன்நிறைவு-ஆகிய துறைகளில் நாம் முன்னேற வேண்டியதன் அவசியத்தையும் சென்ற இதழில் குறிப் பிட்டிருந்தோம்.

காலம் கண்டிப்பாக நம் பக்கம் இல்லை. புதிய அரசமைப்பு இன்னும் சில மாசங்களுக்குள் அமுலாகும் நிலைமையில் இன்று நாமிருக்கின்றோம். இந்த அரசமைப்பு அமுலாகி தற்போதைய பாராளுமன்றம் புதிய தேசிய சபையாக உருவெடுக்கமுன் வேறு சில நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும் - (நாம் கிளர்ச்சிகளைக்கைவிட்டுவிட்டுச் சரணகதியடையாதிருக்க வேண்டுமானால்.)

பெரும்பான்மைத் தமிழ் பா. உ. கள் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறியிருப்பது ஏதோ உண்மை. அதே போன்றுதான் தமிழரசு. தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளினதும், ஏன் வல்வை மாநாட்டின் குறைந்த பட்சக் கோரிக்கைகள் கூட நிராகரிக்கப்பட்டிருப்பதும் உண்மை. ஆனால் இன்று வரை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் இரு கட்சிகளும் தமது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டபின் உருவாகி வரும் அரசமைப்பைத் தாம் ஏற்கப்போவதில்லை - அறவே நிராகரிக்கிறோம் - என்ற கொள்கையைப் பிரகடனம் செய்யவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

இந்தப் பதட்டநிலை உடனடியாக நீங்க வேண்டும். ஈழத்தமிழினத்தின் சார்பில், உருவாகும் அரசமைப்பு, அது அமுலாகு முன் தெட்டத் தெளிவாக நிராகரிக்கப் படவேண்டும்! (இதில் ஈழத்தமிழ் இனம் தவறினால் வேறு பேச்சுக்கே இடமில்லாது போய்விடும்.)

இந்த நடவடிக்கைக்கு முன்னோடியாகவுள்ளது அரசியல் ஒற்றுமை. இதனை எப்படி ஏற்படுத்துவது? இந்தக் கடமையை வளர்ந்துவரும் இளைஞர் சமுதாயத்துக்கு விட்டு விடுகிறோம். இந்தப் பணி மிகவும் கடினமானது.

1949ம் ஆண்டு தொடக்கம் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்க் காங்கிரசுக்குமிடையில் வளர்ந்து வந்த குரோதம் இன்றும் — தமிழரசுக்கட்சி தமிழ்க் காங்கிரஸ் விட்ட அதே பிழையைச் செய்த பின்னும் குறைந்தபாடில்லை. பாராளுமன்ற ஆசனங்களைத் துரும்பென மதித்துச் செயலில் இறங்கும் மனப்பான்மை பலமடையவில்லை. இந்நிலையில் அரசியலில் ஒற்றுமையை — அதுவும் வல்வை மாநாட்டின் அனுபவத்திற்குப் பின் ஏற்படுத்துவது இலேசல்ல. ஆனால் இந்த முயற்சியில் தவறுவதற்கு இடமேயில்லை — ஏனெனில் காலம் நம் பக்கமில்லை.

இந்த ஒற்றுமை ஏற்பட்டதும், ஈழத்தமிழினம் ஒரு தேசீய மாநாட்டில் கூடி, புதிய அரசமைப்பை நிராகரிப்பதாக — ஊரறிய, உலகறியப் பிரகடனம் செய்தல் வேண்டும். அதன் பின் புதிய தேசிய சபையை எமது இனப் பா. உ. கள் பகிஷ்கரித்து, தமது முழு நேரத்தையும் ஈழத்தமிழினத்தின் சமுதாய, பொருளாதார முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டும், அடுத்த பொதுத் தேர்தல் வரை.

(அடுத்த பொதுத் தேர்தல் ஈழத் தமிழினத்தின் உரிமைக் கோரிக்கைக்கு ஒரு சர்வசன வாக்கெடுப்பாக அமையட்டும். தேர்தலில் எமது கோரிக்கை வெற்றி பெற்றால் உலகறிய எமது கோரிக்கையின் வெற்றிக் கொடியை நிலை நாட்டியதாகும்! அதன்பின் எமது உரிமைக் கிளர்ச்சி தொடங்கும்.

இதுதான் ஈழத்தமிழ் மக்களின் மத்தியில் சமர்ப்பிக்கும் திட்டம். இதில் குறையில்லை யென்றும், மாற்றுத் திட்டம் வேறொன்றுமில்லை யென்றால் நாம், குறிப்பாக இளைஞர் சமுதாயம் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இதனைச் செயற்படுத்துவதற்கு எவர்தான் தடையாக இருந்தாலும் அத்தடைகளை மீறி, ஒன்றில் அவர்களை எம் வழிக்குக் கொண்டு வந்தோ, அல்லது ஒதுங்க வைத்தோ, நாம் முன்னேற வேண்டும்.

அறிஞர் அண்ணா கூறியது போல ''நமக்கென்ன என்று கூறும் சுயநலமிகளும், நம்மால் ஆகுமோ என்று பேசும் தொடை நடுங்கிகளும், ஏன் வீண் வம்பு என்று சொல்லும் கோழைகளுமல்ல எமக்குத் தேவை; வீரர்கள் தேவை; உறுதி படைத்த உள்ளங்கள் தேவை.'' சரணகதி என்ற பேச்சுக்கே இடமில்லாது சிந்தித்துச் செயற்பட்டால் எமது பழைய பொற்காலச் சரித்திரத்தை நாம் மீண்டும் உருவாக்கியே தீருவோம்.)

(வெல்க ஈழம்!)

---

# உள்ளூராட்சி மன்றங்களில் களையெடுப்போம் வாரீர்!

உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து துரோகிகளைக் களை பிடுங்குவதற்கு எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு வாக்காளர்களைத் தட்டியெழுப்பித்தயார் படுத்தும் விடுதலையின் பணிக்கு, விடுதலையின் பத்திகளில் கடந்த ஓர் இரு மாதங்களாகத் தாங்கள் நிரந்தரமாக இடமளித்துவருவது பாராட்டப்படவேண்டியதே!

துரோகிகள் கொடி கட்டிக் கொக்கரிப்பது யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் மட்டும்தான் என்று சொல்ல முடியாது! யாழ் குடா நாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பாலானவற்றில் தமிழ் உரிமைப் போராட்டத்திற்கு எதிரான மாற்றுக் கட்சிப் பேர்வழிகள்தாம் மிகுந்துள்ளனர். சுதந்திரக் கட்சியைச் சார்ந்தோராயினும், இடதுசாரிக் கட்சிகளைச் சார்ந்தவர்களாயினும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு மாறுபட்டவர்களே! இவர்களிடம் இனியும் தமிழ்ப் பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் பரிபாலனத்தை நம்பி ஒப்படைக்கலாமா?

இக் கேள்விக்குப் பதிலாக அமைந்ததே யாழ்ப்பாண மாநகராட்சி பற்றிய விடுதலையில் வெளிவந்த முந்திய செய்திகள். நாலும் அறிந்தவர்கள் ஊழல்களை அம்பலப்படுத்த விடுதலை அளிக்கும் இச் சேவையைப் பயன்படுத்த முன்வர வேண்டும். அப்போதுதான் பொது மக்கள் விழிப்படைவர். அடிக்கு மேல் அடியடித்தால் அம்மியும் நகராதா? அதுபோல!

பாரத நாட்டு விடுதலைக்குப் பின்னரும் பிரஞ்சுக் காலனி ஆட்சியின் கீழ் இருந்து வந்த பாண்டிச்சேரி, காரைக்கால் போன்ற பிரஞ்சுத் திட்டுக்களின் விடுதலைக்கு அப் பிராந்தியங்களில் இயங்கி வந்த உள்ளூராட்சி மன்றங்களே வழிகோலின என்ற உண்மையை யாரும் மறந்துவிடக் கூடாது. அறப் போராட்டத்தின் உச்சக் கட்டத்தில் பிரஞ்சுத் திட்டில் இயங்கிவந்த உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தும் போராட்டத்தில் குதித்ததோடு, தத்தம் அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதிகளைச் சுதந்திரப் பிரதேசங்களாகவும் பிரகடனப்படுத்தின. அதற்குத் தாக்குப் பிடிக்க முடியாது பிரஞ்சு அரசாங்கம் சர்வாதிகாரத்தையும், அடக்கு முறைகளையும் கட்டவிழ்த்து விடுவதற்குப் பதிலாக, அப் பகுதிகள் தம் சுயநிர்ணய உரிமையைப் பாவித்து விடுதலைபெற வழி வகுத்துத் தனது ஆளணிகளையும், படைகளையும் அங்கிருந்து விவேகத்துடன் விலக்கிக் கொண்டது.

ஈழத் தமிழர் உரிமைப் போராட்டங்களிலும் எதிர்காலத்தில் அப்படியான ஒரு காலகட்டம் வராமற் போகாது. எனவே, இளைஞர்கள் மட்டுமன்றித் தமிழ்ப் பெருங்குடி மக்கள் யாவரும் விழிப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள்தானே — உற்றார், உறவினர், சாதிக்காரர், மதச் சார்பினர் என்று பார்த்து எதிர்வரும் நல்ல வாய்ப்பைத் தவறவிட்டுவிடக் கூடாது. அல்லாவிட்டால் இப்போது உள்ள அவல நிலையே மீண்டும் மீண்டும் தொடரச் செய்யும். தமிழர் உரிமை பெறும் வாய்ப்பும் அத்தனைக்கு அத்தனை இழுபறிப்பட்டுக் கொண்டே போகும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். அதுபோல விடுதலை யாழ்ப்பாண மாநகரசபைக்கு அண்மையில் நடைபெற எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சித் தேர்தலுக்குக் களம் அமைத்துக் கொடுக்கிறது. இதனை மாணவர்களும், இளைஞர்களும் நன்கு பயன்படுத்தி விடுதலை இதழில் நிறைய எழுத யாழ்ப்பாண மாநகர நிர்வாகத்தில் ஊழலுக்கு ஒன்றும் பஞ்சம் ஏற்பட்டுவிடவில்லை.

ஊழல்களை, நிர்வாகச் சீர்கேடுகளை அம்பலப்படுத்த விடுதலை அமைத்துக் கொடுக்கும் யாழ்ப்பாண மாநகர தேர்தற் களம் நன்கு பயன்படட்டும். எதிர் வரும் தேர்தலும் இப்போதிருந்தே சூடு பிடிக்கட்டும்.

வளவன்
ஈச்சைமோட்டை

---

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை —

# ஆனந்தசங்கரியின் அறிவீனம் தொடர்கிறது!

தமிழர் கூட்டணியின் கருத்தரங்கொன்று ஜூலை மாதம் 22-ந் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இடம் பெற்றது. இதில், திரு. ஆனந்தசங்கரி பேசிக்கொண்டிருக்கும்போது தமிழ் மாணவர் பேரவையின் கொழும்புக் கிளையினரால் வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் பிரசுரம் ஒன்றை ஒருவர் விநியோகித்தார்.

இதன் காரணமாகக் கூட்டத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டதாயினும் சிறிது நேரத்தில் அடங்கிவிட்டது. ஆனல் பேசிக்கொண்டு நின்ற திரு. ஆனந்தசங்கரியோ இந்தப் பிரசுரத்தைப்பற்றியோ, பிரசுரத்தை விநியோகித்தவரைப்பற்றியோ எதுவும் அறியாமல் நவரத்தினமே இந்தக் கூட்டத்தைக் குழப்புவதற்காக இந்த வேலையைச் செய்கிருர் என்று தனது அரசியல் அறிவீனத்தையும், மண்டையில் எதுவித சிந்தனைத் திறன் இல்லாததையும் காட்டி உளறினர். உடனே திரு. அமிர்தலிங்கமும், திரு. சிவசிதம்பரமும் ஆனந்தசங்கரியை இடைமறித்து-உண்மை அதல்ல; இது கம்யூனிஸ்ட் காரர்களின் வேலை என்றுர்கள். உடனே மண்டையில்லாத மண்டூகமான ஆனந்தசங்கரி தனது தவறைத் திருத்திவிட்டுத் தனது பேச்சைத் தொடர்ந்தார். இனிமேலாவது ஆனந்தசங்கரி வீணுக எம்மைப்பற்றிக் கனவுகண்டவன் போல் உளருதிருக்க வேண்டும். திரு. நவரத்தினத்தின் நேர்மையைப்பற்றி அவருடன் பல்லாண்டுகளாகப் பழகிவரும் அமிர், சிவா போன்ற அரசியல்வாதிகளுக்குத்தான் தெரியுமே தவிர, உம்மைப்போன்ற அறிவற்ற, அம்மையாரின் சேலைத் தலைப்பிலே தொங்கிக் கொண்டிருந்த, தினபதியின் மாயவலையில் வீழ்ந்து தமிழரசாரைத் தாக்கி அறிக்கைக்கு மேல் அறிக்கைவிட்ட, கிளிநொச்சித் தொகுதி மக்களின் எதிர்ப்பைத் தாங்க முடியாது அரசியல் ஞானேதயம் பெற்ற அற்பர்களுக்குத் தெரியாது. ஒன்றை மாத்திரம் நினைவில் வைத்துக்கொள்ளும். நீர் இன்றைக்கு எதிர்க்கவேஷம் பூண்டிருக்கும் அரசமைப்பை எதிர்த்து இரண்டாண்டுகளுக்கு முன்பிருந்தே போர்க்குரல் எழுப்பி வருபவர் நவம். இன்றைக்கு ''சுயாட்சி'' என்று துணிந்து சொல்ல நடுங்குகிறீர் நீர். ஆனல் இன்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன்பிருந்தே சுயாட்சியை வலியுறுத்துபவர் நவம். உமக்கு நவத்தைப்பற்றியோ தமிழர் சுயாட்சிக் கழகத்தைப்பற்றியோ உச்சரிப்பதற்கே யோக்கியமில்லை. நான் நினைக்கிறேன், அர்த்தமில்லாமல் நீர் எம்மீது குற்றஞ் சாட்டுவதற்கு உள்ள ஒரே ஒரு காரணம் என்னவென்ருல் கடந்த பொதுத் தேர்தலின்போது பண்டிதரைத் தாக்கிப் பேச எனக்கு ஒரு மேடை அமைத்துத் தாருங்கள் என்று நெடுந்தீவிலுள்ள எமது ஆதரவாளர்களை நீர் கேட்டீர். ஆனல் உம்மைப் போன்ற பச்சோந்திகளை மூலமும், பண்டிதரைத் தாக்கிப் பேச எதுவிதயோக்கியதையையும் அற்றவர்கள் மூலமும் பண்டிதரையோ, தமிழரசையோ தாக்குவிக்க நாம் விரும்பாத காரணத்தினுல் உமது வேண்டுகோளை உதாசீனம்

— பொன்கை வேந்தன் —

செய்து உமதுமுகத்தில் கரிபூசினர் எமது ஆதரவாளர்கள். அதுதான் உமக்கு ஆத்திரமே தவிர வேறில்லை. ஏதோ அடிபட்ட பந்து போல் தமிழர் கூட்டணிக்குள் விழுந்திருக்கிறீர். உமது சொந்தப் புத்தியைக் காட்டாமல் இதிலாவது ஒழுங்காக இரும். நீர் என்னதான் கழுதையாகக் கத்தினுலும் சமசமாஜக் கட்சி கூட்டணியில் சேர்ந்தவுடன் விலகிவிட்டேன் என்ற படுபொய்யை நீர் சொன்னலும் தமிழினம் உம்மை நம்பவோ, மதிக்கவோ தயாரில்லை என்பதை உணர்ந்துகொள்ளும். கொள்கை வாதிகளை, இலட்சிய வாதிகளைச் சாட உமக்கு அருகதையில்லை.

**எமது நிலை இதுதான்:**

நாம் பகிஷ்கரிக்குமாறு கோரினேம். ஆனல் நீங்கள் எமதும், மாணவர்களதும், தமிழ் இளைஞர்களதும் வேண்டுகோளை மீறித் தேசியப் பேரவைக்குச் சென்றுவிட்டீர்கள். நன்ருக உங்கள் பயணத்தைத் தொடருங்கள். தமிழினத்திற்கு ஏதாவது செய்ய முயலுங்கள். உங்களை நாம் நம்பாததற்குரிய காரணங்களை ''விடுதலை''யில் பின்பு தெரிவிக்கிறேம். எங்களை உங்களுடன் இணைக்க விரும்பின் பிரச்சினைகளை மனம் விட்டுப் பேசிச் சமரசம் காண்போம். இதை விடுத்து உங்கள் கூட்டத்தைக் குழப்பவோ உங்களுக்கு இடையூறு செய்யவோ நாமோ தலைவரோ முயலப்போவதில்லை.

தலைவர் நவம் தனது பத்திரிகை அறிக்கையிலேயே உங்களை வாழ்த்தி வழியனுப்பியதை நீங்கள் உணரவேண்டும். தமிழர் சுயாட்சிக் கழகத்தைப் பொறுத்த வரையில் எதுவித பிரசுரத்தையும் உங்களுக்கு எதிராக வெளியிடவில்லை. தமிழ் மாணவர் பேரவையின் பெயரையும், எமது பெயரையும் பாவித்து வேறு யாராவது ஏதாவது செய்தால் அதற்கு நாம் பொறுப்பாளிகள் என்று நீங்கள் ஆராயாமல் கருதக் கூடாது. நாங்கள் வெளியிடும் எந்தப் பிரசுரத்திலும் அச்சகத்தின் பெயரும் வெளியிட்டாளரின் பெயரும் இருந்தே தீரும். ''விடுதலை''ப் பத்திரிகையைக் கையில் வைத்திருப்போரெல்லாம் எமது ''ஏவல்கள்'' என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. எம்மிடம் ''ஏவல்கள்'' இல்லை. எதையும் நேருக்கு நேர் எதிர்கொண்டு வாதிடும், வழக்குரைக்கும் வல்லமை மிக்க நேர்மையாளர்களே எம்மிடம் இருக்கிருர்கள். நாம் கருத்தைக் கருத்தால் மோதுவோம். ஒளிந்து நின்று கல்லெறியும் கோழைகளல்ல நாம் என்பதை நீங்கள் உணர வேண்டும். மேடையிலே நின்று நவத்தை அழைக்கிரேம் என்று மக்களை ஏமாற்றுவதற்காகப் பகிரங்க வேண்டுகோள் விடுவதில் அர்த்தமில்லை. தமிழர் கூட்டணியில் பொறுப்புவாய்ந்த பதவிகளை வகிப்போர் பேச்சுவார்த்தைகள் மூலம் கழகத்தைத் தம்முடன் இணைக்க முயலவேண்டும். தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டுத் (தமிழர்) மகாநாடு கூடி அரசமைப்பு ஆக்கப்படுவதை எதிர்க்கவேண்டுமென்று கழகச் செயற்குழு தீர்மானித்ததற்கு ஒப்ப இன்றைக்கு இரண்டாண்டுகளுக்கு முன்பு திரு. நவம், உடுப்பிட்டிச் சிவசிதம்பரத்திற்கு ஒரு கடிதம் எழுதினர். ஆனல் திரு. சிவசிதம்பரம் எதுவித பதிலையும் அன்று அளிக்காததால் எமது திட்டத்தைச் செயற்படுத்த முடியாது போய்விட்டது. இது ஒன்றே போதும் கழகம் ஒற்றுமையை விரும்பியதா இல்லையா என்பதை உய்த்துணர. இந்த உண்மைகளை உணராது கூட்டணியினர் எம்மைத் தாக்க முனைந்தால் அதைவிட மனச்சாட்சிக்கு விரோதமான செயல் ஒன்றுமில்லை.

**அரசினரின் சதி:**

அரசாங்கத்துக்கு ஆதரவான கட்சிகளைச் சார்ந்தோர் எமதும், தமிழ் மாணவர் பேரவையினதும் பெயரைப் பாவித்துத் தமிழர் கூட்டணிக் கூட்டங்களைக் குழப்ப முனைந்து, எமது பெயரைக் கெடுக்கமுயலலாம். கூட்டணியின் கொழும்புக் கூட்டத்தில் மாணவர் பேரவையின் பெயரால் துண்டுப்பிரசுரம் விநியோகித்தவர் தீவிரமான சமசமாஜக் கட்சி ஆதரவாளர். அதாவது ஆனந்தசங்கரியின் அன்புக்குரிய மாஜித்தோழர். இந்தச் செய்கைகளைப் பற்றிப் பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தமிழர் கூட்டணியினர், தமது பிழைகளை நாம் சாடுவது கண்டு ஆத்திரமுற்று எம்மீது அர்த்தமற்ற முறையில் அபாண்டப்பழிகளைச் சுமத்த முனையும் போதெல்லாம் உண்மைகளை ஊகித்துணர்ந்து மூளைக்கு வேலை கொடுக்குமாறு பொது மக்களை வேண்டுகிரேம். அன்றைய கூட்டத்தில் உண்மையின் வழி நின்றமைக்காக அமிருக்கும், சிவாவுக்கும் எமது நன்றியறிதல்களை உரித்தாக்குகிரேம்.

---

(2-ம் பக்கத் தொடர்)

தன்னையும் ஒரு 'பிணமென்று' நினைத்துத்தான் இப்படிச்செய்திருக்க வேண்டுமென்று நினைத்த தே. பே. உ. வீட்டுக்கு ஓடோடிச்சென்று பொலீசுக்கு முறைப்பாடு செய்தாராம்.

குடிமகன் உடனே நல்லூர் பொலீசாரால் கைது செய்யப்பட்டார். அவர் நடந்ததை விளங்கப் படுத்தியதும் பிணையில் போக அனுமதிக்கப் பட்டார். ஆனல் தேசீயப்பேரவை உறுப்பினர் விடவில்லை. மீண்டும் அவர் கைது செய்யப் பட்டார். அத்தோடு கதை முடியவில்லை. நல்லூர் பொலிசில் வேலை பார்க்கும் ஒரேயொரு தமிழ்ப் பொலிசும் இடமாற்றம் செய்யப் பட்டார். காரணம் கைதுசெய்தவரைப்பிணையில் போகவிட்டவர் ஒரு தமிழரசுவாதியாகத்தானே இருக்கவேண்டுமென ஐயமாகலாம்!

---

# வித்துவான் ஆப்பை இழுத்துவிட்டிருக்கிருர்!

## பூனை கண்ணை மூடினல் பூலோகம் இருண்டுவிடுமா?

### சுயாட்சிக்கழகத்துடன் சுரண்ட முனைவோர் மூளையை அடகுவைக்கக்கூடாது!

**வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம் சுயாட்சிக் கழகத்தைக் கொழும்பில் வெளியான ஒரு வெளியீட்டுடன் தொடர்புபடுத்தி எழுதியிருக்கிருர் — ஈசாவினது கைகளால். அவர் தொனியோ யாக்கோப்பினதே. அதனல் தமிழ் மக்களை ஏமாற்றிவிடலாம் என வித்துவான் நினைத்தால் அவருக்கு எமது அனுதாபம். இந்த அளவுக்கு எழுதியவர் தினபதியையும் சுயாட்சிக் கழக வெளியீடு என்று எழுதிவிட எத்தனை நாள் வேண்டும்?**

ஊழுறும் எரிமலை, கொந்தளிக்கும் அலைகடல், சீறும் புயற் காற்று, உள்ளத்தில் எழும் உணர்ச்சிகள் இவற்றை அணை போட்டவர்களை இதுவரை உலகம் காணவில்லை. வித்துவான் கண்டிருந்தால் அவர் பத்திரிகையை வீணடிக்காமலே சுயாட்சிக் கழகத்தின் கொள்கைகளை — ஈழத் தமிழ் மக்களின் சுதந்திர உணர்ச்சிகளை அழித்துவிட முடிந்திருக்கும்.

**குரங்கு பிடித்தவர்களுக்கு நன்றியா?**

வடக்கு, கிழக்கை நீர்-கொழும்பு, புத்தளம் போல் மாறிவிடாமல் காப்பாற்றிவிட்டார்கள் என்றெல்லாம் துதி பாடியிருக்கிருர். இதுகூடத் தமிழ் அரசுக் கட்சியின் 1965-ம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தின் சாதனைகள்தான். ஆனல் அவர்களை ஈழத் தமிழ்மக்கள் தமிழரசு (சமஷ்டி ஆட்சி) காணவே அனுப்பிவைத்தனர். அவர்கள் சாதித்ததோ — வெளியில் சொன்னலும் வெட்கக் கேடு! இன்னும் அதையே பெறப் போராடுவோமென்று பேசித் திரிவது படு கேவலமான ஏமாற்றுப் பிரசாரம்.

சிறப்பு மாநாட்டில் எடுத்த தீர்மானம், சங்கிலியன் மண்ணில் எடுத்த சங்கற்பம் இவையெல்லாம் அவர்கள் ஆடிய நாடகத்தின் அரிய கட்டங்கள்.

பிள்ளையார் பிடிக்கப்போனவர்கள் குரங்கைப் பிடித்து வைத்துக்கொண்டு நிற்கிருர்கள். அதைப்போய் எமக்குப் போதாதா என்பதும் நன்றி தெரிவிக்க வேண்டுமென்பதும் வித்துவான் போன்ருருக்கே வரக்கூடிய சபலம்!

**யாக்கோப்பின் குரல்!**

எல்லோரும் பகிஷ்கரித்தால் பலன் உண்டு என்கிறவர், திருமலைவிடையத்தில் பிரதமருடன் பேசப் பேரவையைப் பயன்படுத்த வேண்டுமென்கிறதில் தர்க்கத்தைக் காணவில்லை. தேசிய சபையைப் பகிஷ்கரிக்கக்கூடாது என ஒருமாத காலமாகக் கூட்டங்கள் நடத்திவந்த கூட்டணியினரும் இதைத்தான் கூறினர். இதே முறையில் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறும் போதோ அரசமைப்புத் திட்டத்தை எரிக்கும் போதோ சிந்திக்கத் தவறியது எப்படி?

இதே வாதம் செப்டெம்பர் 30-ந் திகதிக்குப் பின்னரும் தலைதூக்கும் என்பதும் அதனல் தமிழர் உரிமைப் போர் உருத் தெரியாமல் போய்விடுமென்பதும் வித்துவானின் மூளைக்கு எட்டாததொன்றல்ல. அதனல்தான் தமிழுக்கும் தமிழ்ப் பிரதேசத்துக்கும் இடி விழும் போதெல்லாம் ஐம்பது ரூபாய்க்காக முதலைக் கண்ணீர் வடிக்க இந்த முதலைகள் அந்தக் குட்டையில் கிடக்க வேண்டுமென்று ஆசைப்படுகிருர்.

மக்கள் கருத்தறியக் கொம்பியூட்டர் கேட்டலைபவர் அதை அறியத் தமிழர் கூட்டணியினர் தமிழ்மக்கள் ஒரே குரலில் எதிர்த்த அரசமைப்பை ஏற்கமுன்னர் தமது பதவிகளைத் துறக்கவைத்து மக்கள் கருத்தை அறிய முற்பட்டிருக்கலாம். அதை விடுத்துக் கேட்பார் மதியைக் கேள்

"காண்டீபன்"

விக்குறியாக்க வேண்டியதில்லையே!

தமிழர் சுயாட்சிக் கழகத்தவர் மீது கண்ணியமற்ற முறையில் கண்டனங்கள் தொடுத்திருக்கிருர். அவர் எழுதியுள்ள அனைத்துக்கும் பதிலாக ஒரு கேள்வி — அன்று நவரத்தினம் ஒருவரின் கூற்ருல் பாதையே மாறிவிட்டதை நயவஞ்சகமான சுயநலம் என்ருல் அதைக் கேட்டு வழிநடந்த மற்றைய எல்லா உறுப்பினரும் எத்தகைய பெரிய துரோகிகள்?

பண்டிதர் மீது விழும் கணைகள் பண்டிதரே ஏவியவை. அதை வைத்துத் திரு. நவரத்தினத்தின் தலையில் கல்லைப் போட முயலுகிருர் வித்துவான்.

வித்துவான் கொழும்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அபேட்சகராகப்போட்டியிட முயன்றவர் என்று கூறித் திரிந்த சுதந்திரன் கோஷ்டியுடன் சேர்ந்து கழகத்துக்குக் கல்லெறிகிருர். அவருடைய ஒவ்வொரு கல்லுக்கும் பதில் உண்டு. ஆனல் பத்திரிகையில் இடமில்லை. ஆயிரமாயிரமாக அவர் கல்வீசினலும் கழகத்தின் கொள்கைகளைச் சாகடிக்க முடியாது. வேண்டுமானல் முயன்று பார்க்கட்டும்!

---

## யாழ். சுதந்திரக்கட்சியினரின் நாடகம்!

''கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம்'' செய்ய எத்தனிப்பதுபோல, யாழ்ப்பாண மாநகரசபை சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், அரசியல் சாசனம் ஐ. நா. சபையால் சிறுபான்மை இனத்தவர்களுக்கு வரையறை செய்யப்பட்ட உரிமைகளின் அடிப்படையில் திருத்தப்பட வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார்கள்.

இதே சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் புதிய அரசியல் சாசனத்தை ஆதரித்து மே மீ 20ம் திகதி மாநகரசபை மண்டபத்தில் கூட்டம் நடத்தியவர்கள் என்பதைத் தமிழ் மக்கள் மறந்து விடமாட்டார்கள். பின் ஏன் இந்த நாடகம்?

இவ்வாண்டு இறுதியில் தேர்தல் வருகிறது. தமிழ் மக்களிடம் எந்த முகத்தோடு போய் வாக்குக் கேட்பது? சுதந்திரக் கட்சி யென்ருல் வோட்டுக்குப் பதில் 'சாட்டை'தான் கிடைக்கும். எனவே இப்படியான தீர்மானங்களை நிறைவேற்றித்தேர்தலில் ''சுயேச்சை'' போர்வையில் இறங்க இப்போதே வேடம் போடுகிருர்கள். இந்த நாடகத்தைக் கண்டு ஏமாறத் தமிழ் மக்கள் ஏமாளிகளல்ல.

---

# தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ ?

இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது: பதிவு இல/QB/4081



விடுதலை

முரசு: 7 | 1 - 8 - 72 | முழக்கம் 108

# தமிழர் கூட்டணியும் தமிழர் சுயாட்சிக் கழகமும்

ஒரு அங்கீகரிக்கப்படாத கட்சியெனச் சுதந்திரன் ஆசிரியரால் வர்ணிக்கப்பட்ட தமிழர் சுயாட்சிக் கழகத்தினதும் அதன் தலைவர் நவரத்தினம் அவர்களின் பெயரும் இன்று தமிழர் கூட்டணிப் பிரமுகர்களின் பத்திரிகை அறிக்கைகளிலும், மேடைப் பேச்சுகளிலும் பிரபலமாக அடிபடுகின்றன. பத்திரிகை அறிக்கைகளை விடுவதை விடுத்தும் கழகத்துக்கு ஆட்சேர்க்கும் முயற்சியை விட்டுவிட்டும் தமது கூட்டணியில் வந்து சேரும்படி பகிரங்க அழைப்புகளை விடுகின்றனர் கூட்டணிப் பிரமுகர்கள்.

எம்மிடமே சிலர் கேட்கிறார்கள் ''நவம் ஏன் கூட்டணியில் சேராதிருக்கிறார்'' என்று. ஆகவேதான், இப்பிரச்சினையை நாமும் ஆராயும் கட்டம் வந்துவிட்டது. இதற்காக, முதலில் ''தமிழர் கூட்டணியின் அரசியல் இலட்சியம்தான் என்ன?'' என்ற கேள்விக்கு விடைகாண வேண்டியுள்ளோம். இம்முயற்சி எம்மைத் திணறடித்து வருகிறது.

★ சில வாரங்களுக்கு முன் கூட்டணிப்பிரமுகர் திரு. சிவசிதம்பரத்தின் இல்லத்தில் நடந்த கூட்டத்தில் இக்கேள்வி எழுப்பப்பட்டபோது, ''திருகோணமலையில் நடந்த கூட்டணித் தொடக்கக் கூட்டத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட நான்கு குறைபாடுகளை நீக்கி அரசியலமைப்பைத் திருத்துவதே கூட்டணியின் குறிக்கோள்'' என திரு. சிவசிதம்பரம் பதிலளித்தார்.

★ அதற்குப் பின் ஜூன் 25-ல் கோப்பாயில் நடந்த கூட்டணி நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஆறு கோரிக்கைகளுக்கிணங்க அரசமைப்பைச் செப்டம்பர் 30-ம் நாளுக்கிடையில் திருத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் —

''தமிழினத்தின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் மீண்டும் பெறுவதற்கும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழினத்தின் அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார வாழ்வை அமைத்துக்கொள்வதற்கும் சாத்வீகப் போராட்டத்தில் இறங்குவதென்று'' தமிழர் கூட்டணி முடிவு செய்வதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

★ ஆனால் ஜூலை 27-ல் வெளிவந்த, கூட்டணித் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தினகரன் நிருபருக்கு அளித்த பேட்டிச் செய்தியில் ''செப்டம்பர் 30-ம் திகதிவரை காலக்கெடு கொடுத்துள்ளோம். அதற்குள் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுமென்று கூற முடியாது. **அதன் பின்னரே பிரிவினைபற்றியோ, சுய நிர்ணய உரிமைக் கோரிக்கை பற்றியோ தீர்மானிக்கப்படும்'' எனக் கூறியுள்ளார்.**

**கூட்டணித் தலைவரே, கூட்டணி நிறைவேற்றிய தீர்மானத்தை ஒரு மாதத்துக்குள்ளேயே மறந்துவிட்டார்!** நாம் திணறுது என்ன செய்வது?

இந்நிலையில் எந்தக் கொள்கை அடிப்படையில் கூட்டணியில் கழகம் சேர்வது என்ற கேள்வி எழத்தானே செய்யும்!

அடுத்து, எந்த விஷயத்திற்கும் மனித சமூகத்தில் ஒரு முறையுண்டு என்பதை நாம் நினைவு கூரவேண்டும். கழகம் கூட்டணியில் சேர்வதுபற்றி ஆராய்வதற்கு ஒரு முறையான அழைப்பு விடப்பட வேண்டும். திரு. நவரத்தினம் அவர்கள் அரசியலைப் பொறுத்தமட்டில் வெறும் வழக்கறிஞர் அல்ல. அவர் இன்று ''90 வீத தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட'' உன்னத அரசியல் இலட்சியத்தைக்கொண்ட அரசியல் இயக்கத்தின் தலைவர். எனவேதான் கழகத்திற்கோ கழகத் தலைவருக்கோ அழைப்புக் கிடைக்கவில்லை என்பதால் கழகம் திருகோணமலைக் கூட்டத்தில் பங்குகொள்ளவில்லை என்பதை நாம் விடுதலை மூலமும், கொழும்பில் நடந்த கூட்டணிக் கருத்தரங்கிலும் கூறியுள்ளோம். அங்கு தலைமை தாங்கிய திரு. எஸ். என். இராசதுரை, தான் அப்பிழையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாகக் கூறினர். மாசம் ஒன்றுக்கு மேலாயும் பிழை திருத்தப்படவில்லை.

இது விஷயத்தை இரண்டு சம்பவங்களின் பின்னணியில் வைத்தே நாம் பார்க்க வேண்டும். ஒன்று, அரசியல் நிர்ணய சபை விடையமாக முன்னர் திரு. செல்வநாயகம் வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகக் கட்டிடத்தில் கூட்டிய கூட்டத்திற்குக் கழகத்திற்கோ, அதன் தலைவர் நவத்திற்கோ எவ்வித அழைப்பும் அனுப்பப்படவில்லை. இரண்டாவது, முன்னர் வல்வையில், உருவாக்கப்பட்ட ஒற்றுமை மாநாட்டை, தமிழரசுக் கட்சியினர் தமது கட்சி நலனுக்காக உடைத்த செய்கை. இவற்றின் பின்னணியில், முறையான அழைப்பை விடுவதை விடுத்துப் பகிரங்க அழைப்புகள் விடுக்கும் செயலை நாம் எந்தக் கண்கொண்டு பார்ப்பது?

கழகத்தைச் சார்ந்த எமக்கு அரசியல் ஒரு வயிற்றுப் பிழைப்பல்ல. கொள்கைதான் எமக்கு முக்கியம் — எமது கடந்த காலச் சரித்திரம் போதிய சான்று பகரும். ஆகவே அழையாத விருந்தினராய், மதியாதார் முற்றத்தை நாம் மிதிக்கத் தயாரில்லை. முறையான அழைப்பு விடுக்கப்படுமானால், பேச்சு வார்த்தைகள் மூலம் கருத்து ஒற்றுமை காண முடியுமானால், தமிழரசாரும், காங்கிரசாரும் முன்னர் தமிழினத்திற்கு இழைத்த துரோகங்களை மறந்து இனத்தின் விடுதலைக்காகப் பாடுபட நாம் தயார். அதுவரை கழகம் தனித்து நிற்கட்டும். எதிர்வரும் 13-ம் திகதி கழகம் கூடும்போது தனது எதிர்காலச் செயற்திட்டத்தை மக்கள் முன் வைக்கும். அதனை ஏற்பதும் விடுவதும் தமிழினத்தைப் பொறுத்தது.

ஆனால் ஒன்றைமட்டும் கூறிவைக்க விரும்புகிறோம். எதுவித அமைப்புமின்றி, போதிய ஆயத்தங்களின்றி, சிங்களத்தில் வாழும் தமிழ் மக்களுக்குப் போதிய அவகாசமளிக்காது படைப்பலம் படைத்த அரசிற்கெதிராகத் தொடரப்படும் போராட்டம் முளையிலேயே கருகும் தன்மையுடையதாயினும், நாம் கூட்டணியின் எந்தவொரு நடவடிக்கைக்கும் குந்தகம் விளைவிக்கப்போவதில்லை. அதேபோல, கழகத்தையும் அதன் போக்கிற்கு விட்டுவிடுங்களெனக் கூட்டணித் தலைவர்களைப் பணிவுடன் வேண்டுகிறோம் — பகிரங்க அழைப்புகளை விடுவதை மறவுங்கள் என வேண்டுகிறோம்!

# பயில்வான் கதை

கு. வன்னியசிங்கம்,
தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி, பா. உ., கோப்பாய்.

(சுவர்க்கலோகத்திலிருந்து)

**நாரத மகர்ஷி பூலோகத்திலிருந்து இவ்விடம் வரும் பொழுதெல்லாம் விடுதலை பத்திரிகை கொண்டு வந்து எனக்குத் தருவார். இதையும் எழுதி அவரிடந்தான் கொடுத்து விடுகிறேன், விடுதலைக் காரியாலயத்தில் சேர்த்து விடும்படியாக.**

எனது பழைய நண்பர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு என்ன நேர்ந்துவிட்டது என்று எனக்குப் புரியவில்லை. அரசமைப்பு நிர்ணய சபைக்குப் போனாரோ போனார். சிங்களப் பெரும்பான்மை வாக்குகளால் எல்லாவற்றையும் தூக்கி எறிவார்கள் என்று தெரிந்திருந்தும், குடியரசு ஆகுவதை ஆதரித்தார். அதற்குக் கைம்மாறுகச் சமஷ்டி தரும்படி கேட்டார். இல்லையென்று மறுக்கப்பட்டது.

அதன்பின் மொழியுரிமை, குடியுரிமை, நிலவுரிமை என்பனவற்றை வைத்து அடிப்படைத் தீர்மானங்களுக்குத் திருத்தங்கள் என்ற உருவத்திலே தமிழர்களுக்குக் குறைந்த பட்சப் பிச்சை போடும்படி கேட்டார். அவையும் மறுக்கப்பட்டன. அரசமைப்பு நிர்ணய சபையிலே இனி ஒன்றும் செய்ய முடியாதென்று கண்டபின்பு அதிலிருந்து வெளியேறிப் பகிஷ்கரித்தார். தமிழர்களைப் பாதுகாக்கக் கூடியனவற்றை அரசமைப்புச் சாஸனத்தை வகுத்துச் சட்டமாக்கும் பொழுது புகுத்த முடியவில்லை என்று தானே பகிஷ்கரித்தார். இப்பொழுது அதே நிர்ணய சபையின் பெயரை மாற்றி 'தேசிய அரசபேரவை' என்று அழைக்கப்படுகின்றது. நிர்ணய சபையைப் பகிஷ்கரித்தவர் இப்போ தேசீய அரச பேரவைக்குத் திரும்பி வந்து அங்கத்துவம் வகிக்கிறார்!

இது என்ன அரசியல் என்று எனக்குப் புரியவில்லை. விளக்கம் கேட்டதற்கு, பேரவையிலே அங்கத்துவம் வகித்தால்தான் அரசமைப்புச் சாஸனத்துக்குத் திருத்தங்கள் கொண்டுவந்து தமிழர்களின் குறைந்த பட்சப் பிச்சைக் கோரிக்கைகளைப் புகுத்திச் சட்டமாக்கலாம் என்று சொல்லுகிறாராம். அதெப்படி? சாஸனத்தைச் சட்டமாக்கும் பொழுது சேர்க்க முடியாதென்று மறுத்தவர்கள் திருத்தியமைக்கச் சம்மதிக்கவா போகிறார்கள்? ஒருவேளை அரச பேரவையிலே இருப்பவர்கள் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களாக இருக்குமோ என்று நாரதரைக் கேட்டேன். இல்லை, இல்லை, நிர்ணய சபையிலே இருந்த அதே அங்கத்தவர்களைக் கொண்டதுதான் அரச பேரவை என்றார் அவர். பிடியரிசி சேர்த்துப் போராட்டம் நடத்தும்படி மக்களைக் கேட்டிருக்கிறாராம் திரு. செல்வநாயகம். அரச பேரவை அங்கத்தவர்களைத்தான் கட்டாயப்படுத்தப் போகிறாராம் என்றும் சொன்னார் நாரதர்.

இதைக் கேட்டபொழுது பழைய ஞாபகம்தான் எனக்கு வருகிறது. முன்பு திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தைப் பற்றிச் சொன்ன பயில்வான் கதையை இப்பொழுது திரு. செல்வநாயகத்துக்கு வைத்துச் சொல்லக் கூடியதாக நடக்கிறாரே என்று நினைக்கும் பொழுது சிரிப்பு வருகிறது. ஓடம் வண்டியிலே, வண்டி ஓடத்திலே என்று சும்மாவா தமிழர் பழமொழி வைத்திருக்கிறார்கள்! காலத்தின் கோலத்தை நினைத்தால் சிரிப்பு வராதா, என்ன?

பதினைந்து வருஷங்களுக்கு முன் தமிழரசுக்கட்சி, எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒப்பந்தம் செய்து கொண்டது. அப்போது திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் அதை எதிர்ப்பதற்காக யாழ்ப்பாணம் முற்றவெளியிலே ஒரு கூட்டம்கூட்டினார். பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தைக் கிழித்து எறிந்துவிட்டு வாருங்கள், நான் இழந்த உரிமைகளைப் பெற்றுத் தருகிறேன் என்ற ரீதியில் மக்களைப் பார்த்துப் பேசி இருந்தார். அடுத்த கிழமை நாங்கள் கூட்டம் போட்டோம். அதிலே பேசிய நான், திரு. பொன்னம்பலத்தின் கோரிக்கையைப் பார்த்தால் எனக்கு ஒரு கதைதான் ஞாபகம் வருகிறது என்று அந்தக் கதையை எடுத்துச் சொன்னேன்.

ஒரு ஊரிலே ஒரு பயில்வான் இருந்தான். அவன் அயல் கிராமங்களுக்குச் சென்று தன் வீரப் பிரதாபங்களைப் பற்றியும், யானை பெலத்தைப் பற்றியும் எடுத்துக் கூறிப் பெருமைப்படுவான். அப்படி ஒரு ஊரிலே பேசிக் கொண்டிருந்த பொழுது, அவ்வூர் வாலிபர் சிலர் அவனிடம் வந்து ''அண்ணே, எங்கள் ஊர் எல்லையில் ஒரு பாராங்கல் இருக்கிறது, அதைச் சுமந்து எடுத்து வந்து ஊர் மத்தியில் போடுவீர்களா?'' என்று கேட்டார்கள். பயில்வான் கல்லைக் காட்டும்படி கேட்டான். எல்லோரும் அவனைக் கல் கிடக்கும் இடத்துக்கு அழைத்துப் போய்க் காட்டினார்கள். 15 அடி உயரமும் 15 அடி அகல நீளமும் கொண்ட பிரமாண்டமான கற்பாறை அது.

அதைக் கண்டதும், ''ஓ, இதென்ன பிரமாதம், நான் சுமந்துவந்து ஊர் மத்தியில் போடுகிறேன், ஆனால் ஒரு நிபந்தனை, எனக்கு ஒருமாச கால அவகாசம் தரவேண்டும். இந்த ஒரு மாசமும் நான் போட்டுத்தரும் பட்டியலில் உள்ள உணவுப் பொருட்களை நீங்கள் வாங்கித்தரவேண்டும். நாளாந்தம் பசுப்பால் 5 படி, நெய் 2 போத்தல், பருப்பு 3படி, ஆட்டிறைச்சி 10 றாத்தல், கோழிமுட்டை 3டசின், பாதாம் பருப்பு 5றாத்தல், சுண்டல் கடலை 10றாத்தல், சம்பா அரிசி 5 படி, இவ்வளவையும் வாங்கித் தந்து கொண்டே இருக்க வேண்டும்'' என்றான் பயில்வான். வாலிபர்கள் அதற்குச் சம்மதித்து, ஊரிலே பிடியரிசி சேர்த்தும் மற்றும் விதங்களிலும் பணம் சேர்த்து பயில்வான் கேட்ட சாமான்களை வாங்கிக் கொடுத்தார்கள்.

மாசம் ஒன்று முடிந்தது. வாலிபர்கள் பயில்வானிடம் சென்றார்கள். எல்லோரையும் அழைத்துக் கொண்டு பாறை கிடக்கும் இடத்துக்குப் போனான் பயில்வான். அருகில் நின்று புயங்களைத் தட்டினான், தொடைகளைத் தட்டினான், வீர கர்ஜனை செய்து ஆரவாரித்தான். வாலிபர்களைப் பார்த்துக் கல்லைச் சுற்றி வளைந்து நிற்கச் சொன்னான். வாலிபர்கள் கல்லைச் சுற்றி வளைத்து நின்றனர். உடனே அவர்களைப் பார்த்து ''சரி, கல்லைத் தூக்கி என் தலைமேல் வையுங்கள், ஊர் மத்தியில் கொண்டு வந்து போடுகிறேன்'' என்றான் பயில்வான்.

இந்தப் பயில்வான் மாதிரி இருக்கிறது திரு. பொன்னம்பலத்தின் கதை என்று அன்று சொன்னேன். ஆனல் இப்பொழுதோ, இந்தப் பயில்வான் மாதிரி இருக்கிறது திரு. செல்வநாயகத்தின் கதை என்று சொல்ல வேண்டி நேரிட்டு விட்டதே!

## எங்கும் 'சுயாட்சி' என்பதே . . . .

(1-ம் பக்கத் தொடர்)

''கச்சேரி விசரன்'' கதையைக் கூறிவைத்தேன். கூட்டம் தொடங்கு முன் அந்தத் தமிழரசுப் பா. உ.ம் வந்து எங்களுக்கருகாமையில் இருந்தார். கதையின் மத்தியில் ''என்ன..., இவர் சொல்கிறார், நீங்களும் எங்களுடைய ''கச்சேரி விசரன்'' கூட்டத்தில் சேர்ந்துவிட்டீர்களாம்'' என்று நவம் கேட்டார். பா. உ.க்கு விளங்கவில்லை. என்னைப் பார்த்தார். நான் 1969ல் காலிமுகத் திடலில் நடந்த பேச்சை நினைவூட்டி அன்று ''எங்களைக் கச்சேரி விசரர்'' என்றீர்கள். இன்று நீங்கள் தனி நாடு பற்றிக் கதைக்கிறீர்கள். ஆகையால் தான் கச்சேரி விசரர் கூட்டத்தில் சேர்ந்துவிட்டீர்களா, என நவம் கேட்கிறார்'' என்றேன். அவர் முகத்தில் அசடு வழிந்தது.

சென்ற பொதுத் தேர்தல் நடந்து முடிந்து, பாராளுமன்றம் முதல் முறை கூடிக் கலைந்த நாள் யாழ்ப்பாண இரவு றெயில் வண்டியில் ஒருவரைச் சந்திக்கச் சென்றிருந்தேன். சில தமிழரசுப் பா. உ.களும் அங்கு நின்றனர். ஒருவர், இன்றைய பொதுச் செயலாளர் திரு. கதிரவேலுப்பிள்ளை. பேச்சுவாக்கில் நான் சொன்னேன் ''பார்த்தீர்களா சென்ற சில நாட்களாக யாழ்ப்பாணம் செல்லும் ஒவ்வொரு றெயிலிலும் தமிழ்க்குடும்பங்கள் வெளியேறுகின்றனர். இந்த நிலையில் நீங்கள் போராட்டம் என்று பேசவே முடியாது. நீங்கள் இணைப்பாட்சி என்று கதைக்கும் வரை இங்கு தமிழ் மக்கள் வாழத்தான் போகிறார்கள். தனி நாடு கிடைக்குமோ, கிடைக்காதோ ஒருபுறமிருக்கட்டும். ஆனல் அதுபற்றிப் பிரசாரம் செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது'' என்றேன். அதற்கு அவர் ''அந்தப் பிரசாரத்தை நீங்கள் செய்யுங்கள், நாம் செய்ய முடியாது'' என்றார்.

மூன்று வருடங்களுக்கு முன் எம்மைக் ''கச்சேரி விசரர்'' எனக் கிண்டல் செய்தவர்கள், இரண்டு வருடங்களுக்கு முன் ''தனி நாடு பற்றிய பிரசாரத்தை நீங்கள் செய்யுங்கள்'' என எம்மிடம் கூறியவர்கள், ஒரு வருடத்திற்கு முன் ''தொடர்ந்தும் நாம் இணைப்பாட்சிக்கே போராடுவோம்'' எனத் தீர்மானம் தீட்டியவர்கள் இன்று ''தனி நாடு'' பற்றிக் கதைக்கிறார்களென்றால் நாம் பெருமைப்படாதிருக்க முடியவில்லை. இருந்தும் நாம் அடக்கமாக இருக்கத்தான் வேண்டும்.

இந் நிலையில் ஒரு கேள்வி எழுவது நியாயம்தான். தமிழர் கூட்டணியுடன் ஏன் சுயாட்சிக் கழகம் இணைந்து இயங்கக்கூடாது என்று.

இதற்கான பதிலை ஆசிரியரின் எண்ணத்தில் பார்க்கும்படி வாசகர்களை வேண்டுகிறோம்.

இப்பத்திரிகை 84, சாந்த பெனடிக் வீதி, கொழும்பு 13ல் வதியும் கனகசபை கந்தையா அவர்களால், கொழும்பு - 13
154 [illegible]